# போராடுவோம்



25/19

தமிழர் தலைவர்
திரு. அ. அமிர்தலிங்கம், பா. உ

# வரலாற்றுப் பேரேடு

தமிழர் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் மீது சுமார் 5 மணித்தியாலமாக ஆற்றிய பேருரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். தமிழர்களின் இன்றைய நிலைமையை நடு நிலையாக ஆராய்ந்துள்ளார். இலங்கை சுதந்திரம் அடைந்தபின் சிங்கள அரசினால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்த வரலாற்றை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். ''எம்மைச் சுட்டுக் கொன்றாலும் இலட்சியத்தைக் கைவிடோம்; மக்கள் எமக்கு இட்ட ஆணையை நிறைவேற்றியே தீருவோம்; தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பை உருவாக்க சிறீ லங்காவின் தேசிய அரசுப் பேரவைக்கு அதிகாரமில்லை; புதிய அரசியல் அமைப்பு சட்டவிரோதமானது அதற்கு தமிழர்கள் கட்டுப் படமாட்டார்கள்'' என்ற கருத்துக்களை ஆணித்தரமாக வலியுறுத்திய அரிய பேருரையை அருமையான தமிழிலும் அழகிய ஆங்கிலத்திலும் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் நிகழ்த்தி உள்ளார்.

ஆதாரங்களோடு அலசி ஆராய்ந்த வரலாற்று உண்மைகள் நிறைந்த இவ் உரை நூலாக வெளிவந்துள்ளது. தமிழர்கள் ஒவ்வொருவரினதும் இல்லங்களில் பேணிப் பாதுகாக்க வேண்டிய இந் நூல் ''போராடுவோம்'' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. தமிழில் பேசியவை முதற் பாகமாகவும், ஆங்கிலத்தில் பேசியவை இரண்டாவது பாகமாகவும் வெளிவந்துள்ளது. மொழி வழித் தொழிற் சங்கங்களின் முன்னணியில் வந்து கொண்டிருக்கும் ''அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம்'' இப்பணியில் ஈடுபட்டுள்ளதை மிகப் பாராட்டுகிறோம்.

தமிழ் மக்கள் எல்லோரும் இந்நூலை வாங்கிப் பயலடைவார்களாக!

N482

முல்லைத்தீவு
24-8-78

சே. மா. செல்லத்தம்பு எம். பி,
தலைவர், தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி

928

# முன்னுரை

தமிழ் ஈழத்தை மீட்டுத் தனி ஆட்சி நடத்துதற்குப் பாராளு-மன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றோர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனவே அவர்கள் பழைய அரசியல் அமைப்பைத் திருத்தி அமைத்தற்கு சிங்கள அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவில் சேர்தற்கு மறுத்தனர்.

இத் தெரிவுக்குழுவினால் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்புச் சட்டம் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ் மக்களின் வெறுப்பினையும் வேதனையையும் மீண்டும் காட்டுதற்கும், சிங்கள அரசு சிங்கள மக்களுக்காக ஆக்கிய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும், தமிழரசு நிறுவப் போராடும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதை நிறுவதற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசியல் அமைப்புச் சட்ட விவாதத்தில் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்தனர். தமிழ் மக்களின் நிலைமையையும் நினைப்பையும் எடுத்துரைத்தபின் விவாதத்தைப் புறக்கணித்தனர். இவற்றை எடுத்துரைக்கும் பணியினைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் கூட்டணியின் செயலாலர் நாயகமும், பாராளுமன்றக் குழுவின் தலைவரும், எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம், பா. உ. அவர்கள் மக்கள் போற்றும் வகையில் திறம்படச் செய்தார். அவர் முதலில் தமிழிலும் பின்னர் ஆங்கி-லத்திலும் ஏறக்குறைய ஐந்து மணி நேரம் தொடர்ந்து உரையாற்றினார்.

அவர் ஆற்றிய தமிழ் உரையினைத் "போராடுவோம்" எனும் பெயர் கொண்ட நூலாக அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் வெளியிடுகின்றது. ஆங்கில உரையும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

INSTITUTE OF HUMANISTIC STUDIES * EVELYN RUTNAM
No. 25, GUILDFORD CRESCENT
COLOMBO 7, CEYLON

அவருடைய இந்தப் பேருரைகள் வரலாற்று முதன்மை வாய்ந்தது. தமிழ் மக்களின் உளம் நிறைந்த வீரத் தலைவர் என்ற முறையிலும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும் அவர் தம் பணியை அஞ்சாமலும் அசையாமலும் அயராமலும் நிறைவேற்றியுள்ளார்.

தமிழ் மக்கள் தாங்கள் இழந்த உரிமையைப் பெறுதற்குக் கால் நூற்றாண்டுக் காலம் போராடிய வரலாற்றினையும், அவர்கள் அடைந்த துன்பங்களையும், தமிழ் ஈழம் அமைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம் என்ற உறுதியையும் அவர் அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்துள்ளார்.

ஒவ்வோர் தமிழனுக்கும் தன்மான உணர்ச்சியையும், தமிழ் ஈழம் போராட்டத்தில் பங்கு பெறுதற்கு வேண்டிய வீர உணர்ச்சியையும் இந்த நூல் ஊட்டுகின்றது.

கா. பொ. இரத்தினம் பா. உ.
அமைப்பு நிருவாகச் செயலாளர்
தமிழர் விடுதலைக் கூட்டணி

வேலணை
18.8.78

---

தமிழ் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் 51 வது பிறந்ததினத்தையொட்டி இவ்வெளியீடு வெளிவந்துள்ளது.

---

(மாண்புமிகு ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் அவர்கள் தலைமையில் 3-8-78ம் திகதி தேசிய அரசுப் பேரவையில் இலங்கையின் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயாலளர் நாயகமும், எதிர்க்கட்சி முதல்வருமான மாண்புமிகு அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் ஆற்றிய பேருரை)

# முந்திய அரசியலமைப்பைத் தீயிட்டெரித்தோம்
# பிரிவினைத் தடைச்சட்டத்தை
# 1976 ல் உடைத்தெறிந்தோம்.

கௌரவ சபாநாயகரவர்களே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளு மன்றக் குழுவின் தலைவர் என்ற முறையிலும் எதிர்கட்சித் தலைவர் என்ற முறையிலும், நேற்றைய தினம் இந்தக் கௌரவ சபையிற் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பையொட்டிச் சில கருத்துக்களைக் கூற நான் முற்படுகின்றேன். முதலிலே தமிழில் எனது உரையை நிகழ்த்தி, தொடர்ந்து ஆங்கிலத்திலே பேசவிரும்புகிறேன். நாம் இங்கே கூறுகின்ற கருத்துக்கள் வருங்காலத்திலும் சரியாகப் புரியப் படவேண்டுமென்ற காரணத்தினால் நான் எனது உரையை ஆங்கிலத் திலும் நிகழ்த்த விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல, வெளிநாட்ட வர்களும், மற்றவர்களும் சரியாகத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென் பதற்காக எனது பேச்சின் பின்பகுதியை ஆங்கிலத்திலே பேச விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகரவர்களே, இன்றைய தினம் ஹிந்துக்களுக்கு ஒரு புனிதமான தினமாகும். ஆடி அமாவாசை ஹிந்துக்கள் எல்லோ ரும் விரதம் அனுட்டிக்கின்ற ஒரு தினம்; விசேடமாக தம் பெற் றோரை இழந்தவர்கள் அவர்களை நினைத்து விரதம் அனுட்டிக்கின்ற ஒரு தினம். அப்படியான ஒரு தினத்திலே இந்தநாட்டிலே தமிழ் பேசும் மக்களுடைய நிலையைப்பற்றி - அவர்களுடைய உரிமையைப் பற்றி - அது புறக்கணிக்கப்பட்டிருக்கும் வகையைப் பற்றி எடுத்துக் கூறுவது மிகவும் பொருத்தமானதென்று நான் நினைக்கின்றேன். ஒரு பாராளுமன்றச் சரித்திரத்திலே அரசியல் அமைப்பை ஆக்குவது 10 ஆண்டுகளுக்கோ 20 ஆண்டுக்களுக்கோ ஒருமுறைதான் கிடைக்கின்ற வாய்ப்பு. ஆனல், நமது நாட்டிலே ஒவ்வோர் அரசாங்கமும் ஒவ வோர் அரசியலமைப்பை ஆக்கமுற்படுமோ என்று நினைக்க கூடிய

வகையிலே அரசியலமைப்புக்கள் அரசியல் மாற்றங்கள் செய்யப் படுகின்றன. ஓர் அரசியலமைப்பை ஆக்குவது என்பது ஒரு நாட்டிலே வாழுகின்ற மக்கள் தமது இறைமையை உறுதிப்படுத்தி— தமது உரிமைகளை நிலைநாட்டி - அந்த இறைமையைச் சரியான வகையிலே செயற்படுத்துவதற்கேற்ற ஆட்சியமைப்பை ஏற்படுத்துவதுதான். அந்த நாட்டிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைத் தத்துவங்கள் – அரசியல் கருத்துக்கள் என்பவற்றின் பிரதிபலிப்பாகவே அந்த அரசியலமைப்பு இருக்கும். நான் இதனைச் இச்சந்தர்ப்பத்திலே குறிப்பிடுவது, மிகவும் பாரதூரமான ஒரு கடமையைச் செய்வதிலே இச்சபை இப்பொழுது ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதனாலேயே. இதை நாங்கள் ஒரு விளையாட்டாகவோ மாற்றுக் கட்சியினரை எள்ளிநகையாடும் ஒரு சந்தர்ப்பமாகவோ அல்லது ஒரு தேர்தல் மேடைப்பிரச்சாரம் போலவோ எண்ணக்கூடாது என்ற கருத்தினை இச்சந்தர்ப்பத்திலே முக்கியமாக எடுத்துக்கூற விரும்புகிறேன்,

எனது முழுமுதற் கடமை.

நான் எனது பேச்சின் ஆரம்பத்திலே குறிப்பிட்டதைப்போல ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இச்சந்தர்ப்பத்திலே நான் இக்கௌரவ சபையிலே இரு தோரணையிலே பேச வேண்டியவனாக இருக்கின்றேன். எனது முதற் கடமையாக, முழுக்கடமையாக - இந்த நாட்டிலே உரிமை மறுக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு உழைக்குமாறு — போராடுமாறு கட்டளையிடப்பட்டு மக்களால் தெரிந்தனுப்பப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றக் குழுவின் தலைவன் என்ற வகையிலே நான் எனது கருத்தைஎடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்திலே சென்ற தேர்தலின்போது இந்த நாட்டிலே ஏற்பட்ட சூழ்நிலையிலே முன்பு ஆட்சி அதிகாரத்திலேயிருந்த அரசியற் கட்சி பாராளுமன்றத்திலே மிகச் சிறிய ஒரு கட்சியாக மாற்றப்பட்ட காரணத்தினால், எதிர்க்கட்சித் தலைமையை ஏற்கவேண்டிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற தோரணையிலும் இந்த அரசியல் அமைப்பில் உள்ள பொதுவான சில அம்சங்களை ஒட்டி எனது கருத்துகளைக் கூற நான் கடமைபட்டிருக்கிறேன்.

நிக்கிரையாக்கினோம்.

இன்று நான் பேச எழும்போது மிகவும் கனத்த உள்ளத்தோடு எழுந்து நிற்கிறேன். 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பு அழிகின்றதே என்று அல்ல அதை நிராகரித்தவர்கள் நாங்கள். அந்த அரசியல் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அன்று பல்லாயிரக்கணக்கான

பொதுமக்கள் முன்னிலையில் "இந்தக் குடியரசு அரசியல் அமைப்பு என்று முடிவுக்குவரும்" என்று கூறி அந்த அரசியல் அமைப்பை நிக்கிரையாக்கியவர்கள் நாங்கள். அந்த அரசியல் அமைப்பை விவாதித்த அரசியல் நிர்ணயசபையிலிருந்து எமது இயக்கத் தலைவரும் அன்று இந்தப் பேரைவயிலிருந்த எங்கள் பிரதிநிதிகளும் வெளிநடப்புச் செய்தார்கள். அந்த நேரம் எமது இயக்கத் தலைவராக இருந்த மறைந்த பெரியார் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து ஏன் வெளிநடப்புச் செய்கிறோம் என்ற காரணத்தை எடுத்துக் கூறினார்கள்.

அரசியல் நிர்ணயசபையில் செல்வா அறிக்கை.

1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் தேதி அரசியல் அமைப்புச் சபை அதிகார அறிக்கை 2607 ஆவது பத்தியில் இருந்து நான் இப்பொழுது வாசிக்கிறேன் — அவருடைய பேச்சு முழுவதையும் நான் இப்பொழுது இங்கு வாசிக்க விரும்பவில்லை – அதில் முக்கியமான பகுதியை மட்டும் வாசிக்க விரும்புகிறேன் :

At the time this Constituent Assembly was convened by the Hon. Prime Minister though there were differences of opinion with regard in the usefullness of our participation in this Constituent Assembly, we decided to accept the invitation of the Hon, Prime Minister in the spirit in which it was made. We moved several amendments regarding the nature of the Constitution, citizenship rights and other fundamental rights. All the amendments have been rejected. I sought an interview with the Hon. Prime Minister with a view to arriving at a compromise solution of this problem which has to be settled not by a majority of votes but by mutual adjustment and agreement. Our interviews and discussions with the Hon. Prime Ministor, the Hon. Minister of Constitutional Affairs and others do not appear to have produced the desired results.

We are always willing to compromise for the sake of an agreed settlement of this vexed question. We indicated to the Hon. Prime Minister and the Hon Minister of Constitutional Affairs, the minimum rights we wanted embodied in the Constitution. But. although our discussions with the Hon. Prime Minister and the Hon. Minister of Constitutional Affairs were very cordial and our views apparently received their serious consideration of the Hon. Prime Minister yet, it has not been proposed to make any alteration in the basic Resolutions as they stand."

He goes on to say:

"In the circumstances...... no useful purpose will be served by our continuing in the deliberations of this Assembly. By taking this step we mean no offence to anybody. We only want to safeguard the dignity of our people. We do not wish to stage a demonstration by walking out. But when we leave the Assembly after the Adjournment today, we will not come back to the Assembly."

மொழிப் பெயர்ப்பு:

"இந்த அரசியல் நிர்ணய சபையை பிரதமர் கூட்டிய நேரத்தில் நாங்கள் இச்சபையில் பங்குபற்றுவதனல் ஏற்படும் பலாபலன்களைப் பற்றி எங்களுக்கிடையே பலவித கருத்து முரண்பாடுகள் இருந்ததாயினும், பிரதமர் விடுத்த அழைப்பிலிருந்த உணர்வை மதித்து இச் சபையில் கலந்து கொள்ளத் தீர்மானித்தோம். புதிய அரசியலமைப்பின் உருவம், பிரஜா உரிமை, மற்றும் பல அடிப்படை உரிமைகள் சம்பந்தமாகவும், நாங்கள் பல்வேறு திருத்தங்களை இச் சபையில் சமர்ப்பித்தோம். எமது எல்லாத் தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்டு விட்டன. எனவே இப் பிரச்சினைக்கு ஓர் உடன்பாடு காணும் நோக்குடன் பிரதம அமைச்சரைப் பேட்டி கண்டோம்.

பிரதமருடனும், அரசியலமைப்பு விவகார அமைச்சருடனும் ஏனையோருடனும் நாங்கள் நடத்திய பேட்டிகளாலும், பேச்சு வார்த்தைகளாலும் திட்டவட்டமாக எவ்வித பயனையும் நாம் பெற முடியவில்லை. இப் பிரச்சினைகள் சம்பந்தமாக நாங்கள் கௌரவத்துடன் கூடிய ஓர் இணக்கமான உடன்பாட்டுக்கு வர எப்பொழுதும் தயாராக உள்ளோம்.

"அரசியலமைப்பில் எமது உரிமைகள் சம்பந்தமாக இடம்பெற வேண்டிய ஆகக் குறைந்தபட்சக் கோரிக்கைகளை பிரதமர், அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஆகியோருக்கு எடுத்துரைத்தோம். எங்கள் கோரிக்கைகளை அவர்கள் சினேகபாவத்துடனும், பொறுப்புணர்வுடனும் செவிமடுத்தார்களாயினும், இப்போதுள்ள அடிப்படைத் தீர்மானங்களில் எவ்விதமான மாற்றமும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை,

"இத்தகைய சூழ்நிலையில், அடிப்படைத் தீர்மானங்களில் எமது திருப்திக்கேற்ற முறையில் எமது மொழியுரிமைகள் இடம் பெருததால் அரசியல் நிர்ணயசபை நடவடிக்கைகளில் தொடர்ந்தும் நாங்கள் பங்குபற்றுவதால், எவ்விதமான பயனும் ஏற்படாது

என்ற வேதனை கலந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். "இம் முடிவுக்கு வந்ததன் மூலம் நாம் யாரையும் குற்றம் சாட்டவில்லை. எங்கள் தமிழ் மக்களின் தன்மானத்தைப் பாதுகாப்பதே எங்கள் ஒரே நோக்கம். இச் சபையிலிருந்து வெளிநடப்பு ஒன்றை நாம் செய்து காட்டவில்லை; ஆனால் இனிமேல் நாங்கள் இச் சபைக்குத் திரும்பி வரமாட்டோம்!"

1971 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையிலே எமது இயக்கத்தின் தலைவர் இந்த வார்த்தைகளைக்கூறி விட்டு அந்தச் சபையிலிருந்து எமது உறுப்பினர்களுடன் வெளியேறி னார்கள். அதன்பின் எமது சம்மதமின்றி, இந்த நாட்டுத் தமிழ் மக்கள் பங்குபற்றும் சூழ்நிலையின்றி அந்த அரசியலமைப்பு ஆக்கப் பட்டது. நான் முன்னர் கூறியதுபோல, அது நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்த அந்த நேரத்தில் மாண்புமிகு நீதி அமைச்சரும் எங்களுடன் கூடஇருந்தார். அந்த நேரத்தில் இந்த நாட்டுத் தமிழ் மக்கள் சார்பிலே அந்த அரசியலமைப்பை முற்று முழுதாக நாம் நிராகரித்தோம். அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று உலகறி யக் கூறினேம். அன்று அரசியலமைப்பைத் திருத்துமாறு நாம் எல் லாரும் சேர்ந்து முந்திய அரசாங்கத்துக்குச் சில கோரிக்கைகளை விடுத்தோம். அதற்கு மூன்று மாத அவகாசமும் கொடுத்தோம். ஆனால், எந்தவிதமான திருத்தமும் செய்யப்படவில்லை,

செல்வா பதவி விலகினார்

எந்தவிதமான திருத்தங்களையும் செய்ய அவர்கள் மறுத்த காரணத்தால் சனநாயக ரீதியாக மக்களின் கருத்தை வெளிப்படுத்து வதற்கு ஒரே ஒரு வழி ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்துவதுதான் எனக் கருதி எமது தலைவர் திரு. செல்வநாயகம் அவர்கள் காங் கேசன்துறைத் தொகுதியில் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்து ஒரு இடைத்தேர்தலை ஏற்படுத்த வழிவகுத்தார்.

கௌரவ பிரதமர் அவர்கள் நேற்றைய தினம் பேசும்பொழுது எங்களுடைய இன்றைய சனாதிபதி அவர்கள் வேறு ஒரு விஷயத்தை நிலைநாட்டுவதற்காக 1975ஆம் ஆண்டிலே தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு ஒரு இடைத்தேர் தலை கொழும்பு தெற்கிலே ஏற்படுத்தினார் எனக் குறிப்பிட்டார். ஜனாதிபதி அவர்கள் அந்தவிதமாக மக்களின் சனநாயக உரிமைக்கு மதிப்புக் கொடுத்ததைப் பெருமையுடன் பிரதமர் அவர்கள் எடுத் துக்கூறினார்கள். அதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு — அதாவது 1972ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2ஆம் தேதியை — மகாத்மா காந்தியடிகள் பிறந்த தினத்தை — காந்திய வழியில் எம்மை வழி

நடத்திய எமது தலைவர் தெரிவு செய்து அந்தத் தினத்திலே தமது பதவியை ராஜிநாமா செய்தார். ராஜிநாமா செய்த அந்த நேரத்திலே அவர் இந்தச் சபையிலே ஓர் அறிக்கையை விடுத்தார். அந்த அறிக்கை முழுவதையும் நான் இந்த நேரத்திலே வாசிக்காவிட்டாலும் அந்த அறிக்கையின் முக்கியமான பகுதியை இந்த சந்தர்ப்பத்தில்ல எடுத்துக் கூற விரும்புகிறேன்.

I will read only the last paragraph and table this. This is what he said :

" It is claimed by this Government that a sizeable section of the Tamil people accept the Constitution. We deny this and want to give an opportunity to the Government to prove this claim. The best way in which that can be done is for me as leader of the Tamil United Front to resign my seat in this honourable House and re-contest it on my policy and ask the Government to oppose me on its policy. Of couse, the decision will be that of the Tamil people.

My policy will be that in view of the events that have taken place, the Tamils of Ceylon should have the right to determine their future, whether they are to be a subject race in Ceylon or they are to be a free people. I shall ask the people. to vote for me on the second of these alternatives. Let the Government contest me on that position. If I lose, I will give up my policy; if the Government loses let it not say that the Tamil - speaking people support its policy and its Constitution. Let not the Government deprive the people of their decision on the issues raised by postponing the by - election.

I now tender to the Acting Cleark of the National State Assembly my letter of resigaation. I now leave the Chamber."

மொழிப்பெயர்பு

"தமிழ் மக்களில் ஒரு கணிசமான பகுதியினர் இவ்வரசியல் அமைப்பை ஏற்றுக்கொண்டிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. நாம் இதை மறுக்கிறோம். தமது கூற்றை நிரூபிப்பதற்கு அரசாங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க விரும்புகிறோம். இதற்குச் சிறந்த வழியாக தமிழர் கூட்டணியின் தலைவர் என்ற வகையில் இச்சபையில் எனது ஸ்தானத்தை நான் துறந்து எனது கொள்கையை முன்வைத்து நான் மீண்டும் போட்டியிடும் போது அரசாங்கம் தனது கொள்கையை முன்வைத்து என்னோடு போட்டியிட வேண்டுமென்று கேட்கின்றேன். அத்தேர்தல் முடிவு தமிழ் மக்களது தீர்ப்பாகவே இருக்கும்.

இந்நாட்டில் சென்ற 25 ஆண்டுகளாக நடந்தவற்றை மன திற்கொண்டு தமிழ் மக்கள் இந்நாட்டில் ஓர் அடிமை இனமாக அழிவதா அல்லது சுதந்திர மக்களாக வாழ்வதா என்ற தமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை அவர்களுக்கு வேண்டும் என்பதே எனது கொள்கையாக இருக்கும். விடுதலை பெற்ற மக்களாக வாழ வேண்டும் என்ற கொள்கைக்கு வாக்களிக்குமாறு மக்களை நான் கேட்பேன். இந்தக் கொள்கையில் அரசாங்கம் என்னோடு போட்டியிடட்டும்; நான் தோல்வியடைந்தால் எனது கொள்கையை நான் கைவிடுகிறேன். அரசாங்கம் தோல்வியடைந் தால, தமது கொள்கையையோ அரசியல் திட்டத்தையோ தமிழ் மக்கள் ஆதரிப்பதாகக் கூறுவதை நிறுத்திவிட வேண்டும். இடைத் தேர்தலைப் பின் போட்டு இப்பிரச்சினைகளை யொட்டி மக்கள் தீர்ப்பு வழங்குவதைத் தடுக்க வேண்டாமென்று அரசாங் கத்தை கேட்டுக் கொள்ளுகிறேன்.

'நான் இப்பொழுது எனது பதவி விலகல் கடிதத்தை தேசிய அரசுப் பேரவை பிரதிலிகிதரிடம் கையளித்து விட்டு சபையி லிருந்து வெளியேறுகிறேன்.

இப்படிக் கூறிவிட்டு எங்கள் தலைவர் 1972ஆம் ஆண்டு ஒக்ரோ பர் மாதம் 2ஆம் தேதி இந்தச் சபையிலிருந்து வெளியேறினர். ஆனல், அவர் எதைச் செய்ய வேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டாரோ அதை அந்த அரசாங்கம் செய்தது மாத்திரமல்ல இடைத்தேர்தலையும் இரண்டு வருடங்களாக நடத்தாமல் பிற் போட்டுக் கொண்டே வந்தார்கள். அந்த அரசியலமைப்பையொட்டி தமிழ் மக்கள் சனநாயக ரீதியாக தங்கள் கருத்தை எடுத்துக் கூறு வதற்கு வாய்ப்பளிக்க மறுத்தார்கள். இறுதியில் 1975ஆம் ஆண்டு தை மாதத்தில் அந்தத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் அர சாங்கத்தின் முழுச்சக்தியும் எமக்கெதிராக உபயோகிக்கப்பட்டது. அமைச்சர்கள் வந்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வோர் அமைச் சராக முகாமிட்டு தங்கள் வேட்பாளருக்காக வேலை செய்தார்கள். வீட்டுக் கடன்கள் பலருக்கு வீடு தேடிக் கொண்டு போய்க் கொடுக் கப்பட்டன. வீடமைப்பு அமைச்சர் அங்கேயே முகாமிட்டிருந்தார். இப்படியெல்லாம் நடந்தும் அந்தத் தொகுதி வாக்காளர்கள், 75 வீதத்துக்கு மேலான வாக்காளர்கள் திருவாளர் செல்வநாயகம் அவர்களுக்கு வாக்களித்து அவரை அமோகமாக வெற்றிபெறச் செய்தார்கள்.

## செல்வா அறிக்கை

அப்படி வெற்றி பெற்ற நேரத்திலே திருவாளர் செல்வநாயகம் அவர்கள், தமக்குக் கிடைத்த இந்த வெற்றியைத் தமிழ் தேசிய இனம் தனது இறைமையை நிலைநாட்டித் தனது சொந்த ஆட்சியை ஏற்படுத்தத் தமக்களித்த கட்டளையாகும் என்று கூறினர்.

"I consider the verdict of the elections as a mandadte that the Eelam Tamil nation should exercise the sovereignty already vested in the Tamil people and become free."

இதைத் தொடர்ந்து, இந்தப் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் வரக்கூடிய விதத்தில், இலங்கையின் சுதந்திர தினமாகக் கருதப் பட்ட 1976ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் தேதி தமிழர் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கையெழுத்திட்டு ஒரு தீர்மானத்தை இந்தச் சபையில் சமர்ப்பித்தார்கள். அந்தத் தீர்மானத்தை இந்தச் சபையில் வாசித்துக் காட்டுவது பொருத்த மானதென நினைக்கிறேன்.

The whereas the Sinhalese and Tamils in Sri Lanka constitute two separate nations with their inherent right to selfdetermination.

And whereas the Sinhalese nation and the Tamil nation who were shackled together by foreign rule remain to this day so shackled.

And whereas all Governments of independent Sri Lanka have always encouraged and fostered the aggressive nationalism of the Sinhalese nation culminating in the unilateral imposition of the present Constitution which has condemned the Tamils to the position of a subject nation.

This Assembly resolves to recognize verdict of the K. K. S. by-electtion as a mandate for the restoration and re-constitution of the free, sovereign, secular, socialist State of Tamil Eelam.

மொழிப் பெயர்ப்பு:

"இலங்கையில் வாழும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சுய நிர்ணய உரிமையுள்ள இரு தனித் தேசிய இனங்களாக இருப் பதனாலும்—

அந்நிய ஆட்சியினால் பலவந்தமாய் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்ட சிங்களத் தேசிய இனமும், தமிழ்த் தேசிய இனமும் இன்றும் அப் படியே பிணைக்கப்பட்டிருப்பதாலும்—

சுதந்திர இலங்கையின் அரசாங்கங்கள் எல்லாம் சிங்களத் தேசிய இனத்தின் ஆக்கிரமிப்பு இன உணர்ச்சிக்கு ஆதரவளித்து வளர்த்து தமிழ் மக்களை நிரந்தரமாக ஆளப்படும் இனமாக ஆக் கும் இன்றைய அரசியலமைப்பை அவர்கள் விருப்பத்திற்கு மாறாக தமிழ்த் தேசிய இனத்தின் மீது திணித்திருப்பதாலும்—

காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவை சுதந்திர மதசார் பற்ற சோசலிச தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்ய இடப்பட்ட கட்டளையாக ஏற்றுக் கொள்ள இப்பேரவை தீர்மானிக்கிறது."

இந்தத் தீர்மானத்தை 1976 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆந் தேதி இந்த நாட்டின் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலிலே வரக்கூடிய விதமாக எம் உறுப்பினர்கள் சமர்ப்பித்தார்கள். ஆனால், வழக்கம் போல் அந்தத் தீர்மானம் விவாதத்துக்கு வராமல் இருக்கும் வகையில் அரசாங்கம் தட்டிக்கழித்து வந்தது. தனியார் பிரேரணை கொண்டுவரப்படுகின்ற தினங்களிலே பாராளுமன்றத்தில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் எப்படி அன்று அமைந்தன என்று தங்களுக்குத் தெரியுமென நான் நினைக்கின்றேன். அன்றைய ஆளும்கட்சி உறுப்பினரொருவராற் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தின் மீதான விவாதத்திலே உறுப்பினர்கள் தேவையற்ற பேச்சுக்களை நடத்தி அதற்கடுத்திருந்த எமது உறுப்பினர்களின் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாதவாறு தடுத்தார்கள். அந்த வருடம் முழுவதும் எமது தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தினார்கள். அந்தப் பாராளுவாரமும் முடிவுற்றது.

இந்தச் சூழ்நிலையிலேதான் 1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநில மகாநாடு நான் பிறந்த இடமான வட்டுக்கோட்டைத் தொகுதியிலே நடைபெற்றது. அந்த மகாநாட்டிலே கடந்த 30 ஆண்டுகாலமாக இலங்கை அரசியலிலே நடந்தேறிய நிகழ்ச்சிகள் அத்தனையுமே மிக நுணுக்கமாக ஆராயப்பட்ட பின்பு தமிழ்த் தேசிய இனத்தின் மாற்றமுடியாத ஒரு முடிவாக நாம் ஒரு முடிவுக்கு வந்தோம், அந்தத் தீர்மானம் முழுவதையும் இங்கே வாசிக்காவிட்டாலும் அந்தத் தீர்மானத்தின் முக்கிய ஒரு பகுதியை நான் இங்கே சமர்பிக்க விரும்புகிறேன்.

"The first National Convention of the Tamil United Liberation Front Meeting at Pannakam on the 14th day of May, 1976, hereby declares that the Tamils of Ceylon by virtue of their Great Language, their religions, their separate culture and heritage, their history of Independent existence as a separate state over a distinct territory for several centuries till they were conquered by the armed might of the European invaders, and above all by their will to exist as a separate entity ruling themselves in their own territory, are a nation distinct and apart from Sinhalese, and this Convention announces to the world that the Republican Constitution of 1972 has made the Tamils a slave nation ruled by the new colonial masters, the Sinhalese, who are using the power they have wrongly usurped to deprive the Tamil nation of its territory, language, citizenship, ecconomic life, opportunities of employment and education, thereby destroying all the attributes of nationhood of the Tamil people.

And therefore this Convention resolves that restoration and reconstitution of the Free, Sovereign, Secular Socialist State of TAMIL EELAM based on the right of self-determination inherent to every nation has become inevitable in order to safeguard the very existence of the Tamil Nation in this Country."

மொழிபெயர்ப்பு

"1976-ம் ஆண்டு மே 14-ம் திகதி பண்ணாகத்தில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநில மாநாடு—

(அ) தமது உன்னதமான தாய்மொழியாலும், தமது சிறப்புப் பெற்ற கலாச்சார பாரம்பரியங்களாலும், ஐரோப்பிய படையெடுப்பாளரின் ஆயுத பலத்தினால் வெற்றிகொள்ளப்படும் வரை பல நூற்றாண்டுகளாக ஓர் பிரத்தியேகமான பிரதேசத்தில் தனி அரசாகச் சுதந்திர வாழ்வு நடத்திய வரலாற்றாலும், தமது பிரதேசத்தில் ஓர் தனி இனமாக வாழ்ந்து தம்மைத் தாமே ஆளும் உள்ள உறுதியாலும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் சிங்களவரிலிருந்து வேறுபட்ட ஓர் தனித்தேசிய இனமென்று இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

(ஆ) 1972-ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு மூலம் தமிழ் மக்களை புதிய ஏகாதிபத்திய எஜமானர்களான சிங்கள மக்களால் ஆளப்படும் அடிமைத் தேசிய இனமாக மாற்றி, தாம் தவறாக் அபகரித்துக் கொண்ட அதிகாரத்தால் தமிழ் தேசிய இனத்தின் தனிப்பிரதேசம், மொழி, குடியுரிமை, பொருளாதார வாழ்வு வேலை வாய்ப்பு, ஆகியவற்றைப் பறித்துத் தமிழ் மக்கள் ஓர் தனித்தேசிய இனமென்று கூறுவதற்கான தகுதிகள் அத்தனை யையும் அழிக்கின்றார்கள் என்றும் இம்மாநாடு இத்தால் உலகுக்கு அறிவிக்கின்றது.

இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுதந்திர இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சோசலிச தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது"

தடைச்சட்டம்

1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மகா நாட்டிலே நாம் அன்று எடுத்த முடிவு அது. இந்த முடிவை ஒட்டி அன்றைய அரசாங்கம் ஒரு விசித்திரமான நடவடிக்கையை எடுத்தது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்றே அவசரகாலச்

சட்டத்தின் கீழ் ஓர் அரசாங்க வர்த்தமானி வெளியிடப்பட்டது இப்படியான தீர்மானம் நிறைவேற்றுவது சட்ட விரோதம் என்று. அதற்கு இருபது ஆண்டுகள் சிறைக்கு அனுப்பக்கூடிய தண்டனையை விதித்து ஓர் அவசர காலச் சட்ட விதியை அரசாங்கம் நிறைவேற்றியது. எங்கள் மகாநாடு வட்டுக்கோட்டையில் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் இந்தச் சட்டவிதிகள் அரசாங்க வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டன. அந்தச் சட்ட விதிகளின் கீழ் இந்தத் தீர்மானத்தை பத்திரிகைகள் பிரசுரிக்காது தடை செய்யப்பட்டது. அந்தத் தீர்மானத்தைப் பிரசுரிப்பதோ வெளியிடுவதோ தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டது.

நமது பதில்

அதற்கு ஒரே ஒரு பதிலைத்தான் நாங்கள் கொடுக்க முடியும் அந்தப் பதிலை நாங்கள் கொடுத்தோம். எந்தத் தீர்மானத்தைப் பிரசுரிப்பது சட்டவிரோதம் என்று அரசாங்கம் அவசரகாலச் சட்ட விதிகளைக் கொண்டு வந்ததோ அந்தத் தீர்மானத்தை ஆயிரக் கணக்கில் துண்டுப் பிரசுரமாக அச்சடித்து நாடு முழுவதும் நாமே முன்னின்று விநியோகித்தோம். 1976 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதி குடியரசு தினத்தன்று சட்டத்தை மீறி அந்தத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித் தோமென்று எங்களில் சிலரைக் கைது செய்தார்கள். என்னையும், சாவகச்சேரிப் பிரதிநிதி (திரு. வி. என் நவரத்தினம்) ஊர் காவற்றுறைப் பிரதிநிதி (திரு. கா. பொ. இரத்தினம்) பருத்தித்துறைப் பிரதிநிதி (திரு கே. துரைரத்தினம்) ஆகியோரையும் கைது செய்தார்கள். எங்கள் நான்கு பேரையும் கைதுசெய்து கொழும்புக்குக் கொண்டு வந்து பஜெட் ஸ்ரேட்டிலே அடைத்து வைத்தார்கள். பத்து நாட்கள் அவ்விடம் எங்களை அடைத்து வைத்தார்கள்.

பஜெட் வீதிச் சிறையில்

இந்த விடயத்தில் பிரதமர் அவர்கள் நேற்றுக் குறிப்பிட்ட அவர்களுடைய அனுபவத்திற்கும் எங்கள் அனுபவத்திற்கும் இடையில் கொஞ்சம் தொடர்பு இருப்பதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. பஜெட் ஸ்ரேட் சிறைச்சாலையில் தனித் தனி அறைகளில் பலர் அடைத்து வைக்கப்பட்ட அநியாயத்தைப் பற்றி நேற்றுப் பிரதமர் அவர்கள் இந்தப்பேரவையிலே எடுத்துச் சொன்னார்கள். எங்கள் நால்வரையும் கொண்டுவந்து ஒவ்வொரு மூலைக்கும் ஒவ்வொருவராகத் தனித் தனி அறைகளில் அடைத்தார்கள். அப்படி அவர்கள் அடைத்து வைத்த அந்தப் பத்து நாட்களும் நாங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் இருக்கவில்லை. காவலுக்கு நின்றவரைத் தவிர வேறு மனிதத் தொடர்பு எங்களுக்கு இல்லாத வகையில் எங்களை வைத்திருந்தார்கள்.

### ட்ரயல் – அற் – பார்

இவ்வளவுக்கும் நாங்கள் செய்த குற்றம் என்ன? ஒரு துண்டுப் பிரசுரத்தைப் பொது மக்களுக்குக் கொடுத்ததுதான். அதன் பின்னர் பிரசித்திபெற்ற "ட்ரயல் அற் பார்" என்ற வழக்கில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் அந்த அவசரகாலச் சட்டத்தின்கீழ் எங்களைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அதில் முதல் எதிரியாக நிற்கும் பெரும்பேறு எனக்குக் கிடைத்தது. எங்களை அவ்விதம் நிறுத்தி எங்களுக்கு எதிராக மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்தார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களிலே நாம் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் இருபது வருடச் சிறைவாசம் எங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும். அதற்கும் மேலாக எங்களின் சொத்து முழுவதும் பறிமுதல் செய்யப்படும் என்றும் விதி இருந்தது. அந்த நேரத்தில் தான் இந்த நாட்டின் தலைசிறந்த வழக்கறிஞர்களாக இருந்த அறுபத்தேழு சட்டத்தரணிகள் எங்களுக்காக வாதாட ஆஜரானார்கள். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. எம். திருச்செல்வம், திரு. ஆர். ஆர். குரூசெற் தம்பையா, திரு. சாம் ஜே. கதிர்காமர், திரு. நவரத்தினராசா ஆகிய இந்த ஆறு இராணி வழக்கறிஞர்களோடு முன்னாள் சொலிசிற்றர் ஜெனரலாக இருந்த திரு. புள்ளேநாயகம் மற்றும் எனது நண்பர் இன்றைய நல்லூர் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம் ஆகிய அறுபத்தேழு சட்டத்தரணிகள் இது உரிமையைப் பாதிக்கின்ற விடயம் என்ற அடிப்படையில் நீதிமன்றத்தில் தோற்றி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த வழக்கை நடத்தினார்கள்.

### விடுதலையானேன்

இரண்டு அம்சங்களிலே நாங்கள் அந்த வழக்கைத் தாக்கினோம். என்மீது குற்றம் சாட்டப்பட்ட பொழுது நான் கூறினேன்; "இரண்டு காரணங்களுக்காக நான் இந்த நீதிமன்றத்தை அங்கீகரிக்கவில்லை. ஒன்று இந்த நீதிமன்றம் சட்டரீதியான ஒரு அரசியலமைப்பின் கீழ் அமைக்கப்படவில்லை. ஆனபடியால் என்னை விசாரிக்க அதற்கு அதிகாரமில்லை, இரண்டாவதாக இந்த நீதிமன்றம் சட்ட விரோதமான அவசரகால விதிகளின் கீழ் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனபடியால் இந்த நீதிமன்றத்துக்கு என்னை விசாரிக்க அதிகாரம் இல்லை. ஆனபடியால் நான் குற்றவாளியா சுற்றவாளியா என்று கூற மாட்டேன் என்று அந்த வழக்கிலே நான் கூறினேன். அதைத் தொடர்ந்து எங்கள் சட்டத்தரணிகள் வாதித்தார்கள். பல நாட்கள் நடைபெற்ற பிரசித்திபெற்ற இந்த வழக்கில் அந்த மூன்று நீதிபதிகளும் தீர்ப்பு வழங்கினார்கள். 1971 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டை ஆண்டு வந்த அவசரகாலச் சட்டவிதிகள் செல்லுபடியாகமாட்டா. அந்த அவசரகால சட்டப் பிரகடனம் சட்ட விரோதமானது என அந்த நீதிபதிகள் தீர்ப்பு வழங்கி தமக்கு எங்கள் வழக்கை விசாரிக்க அதிகாரம் இல்லை எனக் கூறி என்னை விடுதலை செய்தார்கள்.

## 'திரு'வின் வாதம்

அந்த நீதிமன்றத்திலே திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் எங்கள் சார்பில் அந்த அவசரகாலச் சட்ட விதிகளுக்கு எதிரான நியாயங்களை எடுத்துக் காட்டி வாதாடினார்கள். திரு. திருச்செல்வம் அவர்கள் அந்த அரசியல் அமைப்புக்கு எதிரான—அரசியல் அமைப்பு என்று நான் இங்கு குறிப்பிடும் பொழுது எந்த அரசியல் அமைப்பைக் கொண்டு வருவதற்கு இன்று சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அரசியல் அமைப்பையே குறிப்பிடுகிறேன்—நியாயங்களை எடுத்துக்கூறி அந்த அரசியலமைப்பு செல்லுபடியற்றது என்ற வாதத்தை நடத்தினார்கள். அதையொட்டி அந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பும் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. அந்தத் தீர்ப்பிலே ஒரு குறிப்பான பகுதியை மாத்திரம் இந்தச் சந்தர்ப்பத்தில் வாசித்துக்காட்ட விரும்புகிறேன். திரு. திருச்செல்வம் அவர்கள் மூன்று முக்கியமான காரணங்களினால் அந்த அரசியல் அமைப்புச் செல்லாது என வாதாடினார்கள். மூன்று நீதிபதிகளும் அளித்த அத்தீர்ப்பின் ஒரு பகுதியை இப்பொழுது வாசிக்கின்றேன்.

"On behalf of the defence it was submitted that the new Constitution is not a truly autochonous Constitution. Although the United Front in their joint election manifesto sought a mandate to permit the elected members of Parliment to function simultaneously as a Constitute Assembly to draft and adopt a new Constit tution declaring Ceylon to be a free, sovereign and independen- Republic, none of the other parties sought or received such a mandate. It was further stated that although the parties of the United Front won a sweeping victory at the 1970 polls, they received less than half the total number of votes polled. It was contended that once there is a break in legal continuity the sovereignties of the inhabitants of the Island until then under eclipse, so to speak, appear once again. Hence the sovereignty of the Tamil Nation which was ethnically, geographically and linguistically seperately identifiable and listinct, cally separately indentifiable and istinct, revived. Historically the territory called Jaffnapatam that belonged to tamil nation lay in the northern and eastern portions of Ceylon from the limits of Puttalam and Mannar to the Kambukkan Oya. Therefore if an autochonous Constitution is to be promulgated the consensus of the majority of the Tamil nation should be unequivocally obtained. The Tamil members of Parliament partcipated in the proceedings of the Constituent Assembly for a limited time in order to see if their minimam

demands would be accommodated. To this end they introduced certain amendments which were rejected. In those circumstances the Tamil representatives walked out of the Constituent Assembly and took no further part in its deliberation.

When the National State Assembly was convened under the new Contitution the Tamil members took the oath of allegiance to the Constitution. This was solely because they wished to continue agitating their claims in the highest forum of the land and still hoped that their minimal demands would be acceded to by the majority. In fact the Tamil members showed their repudiation of the Constitution in a symbolic way when they made a bonfire of if by way of a public demonstration, It was further contended that autochthony cannot be established by a mere counting of heads. The question is does the majority of the Tamil nation accept the new Constitution ? That should have been ascertained by a referendum or plebiscite, but this was not done. As the Constitution had no legal continuity with the past, and as the claims that it is an autochthonous Constitution were also not valid the Constitution is illigal and the courts set up under it are not valid."

மொழிப்பெயர்ப்பு

*"புதிய அரசியல் சட்டம் உண்மையில் மக்களின் அதிகாரத்திலிருந்து உருவானதல்ல என்று எதிரிதரப்பில் எடுத்துக்காட்டப்பட்டது. இலங்கையை சுதந்திரமும் இறைமையும் கொண்ட ஒரு குடியரசாக மாற்றியமைப்பதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனியாக பாராளுமன்றத்துக்கு வெளியே அரசியல் நிர்ணய சபையாக் கூடுவதற்கு ஐக்கிய முன்னணி தனது கூட்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொது மக்களிடமிருந்து ஆணையைக் கோரியிருந்தாலும் கூட, வேறு எந்த ஒரு அரசியற் கட்சியும் அவ்வாறன ஆணையைக் கோரவுமில்லை பெறவுமில்லை. 1970 பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணி மிகப்பெரிய வெற்றியை யீட்டிய போதிலும், அது பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் அரைவாசிக்கும் குறைவாகவே பெற்றுள்ளது என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது, சட்டத் தொடர்பு துண்டிக்கப்படும் போது அது வரை மறைவாக இருந்து வந்த மக்களின் இறைமை மீண்டும் ஒருமுறை வெளியே தெரிய ஆரம்பிக்கிறது என்று வாதிடப்பட்டது, இந் நிலையில் இனத்தாலும், மொழியாலும், நிலத்தாலும் வேறுபட்ட தமிழ் நாட்டினத்தின் இறைமையும் மீளப்பெற்றுள்ளது. வரலாற்று ரீதியாக புத்தளம், மன்னார் தொடக்கம் கும்புக்கன் ஆறுவரை எல்லையாகக் கொண்ட வடக்கு,*

கிழக்கு பகுதிகளில் தமிழ் நாட்டினத்துக்கு சொந்தமான நாடு, 'யாழ்ப்பாணப்பட்டினம் என்ற பெயரில் இருந்து வந்திருக்கிறது. ஆகவே மக்களின் ஆணையிலிருந்து அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டுமாயின் பெரும் பான்மையான தமிழ் மக்களின் சம்மதமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் குறைந்த பட்சக் கோரிக்கை களாவது ஏற்கப்படுகிறதா என்று பார்ப்பதற்காக ஒரு குறிப்பிட்ட காலம் அரசியல் நிர்ணயசபை நடிவடிக்கைகளில் பங்குபற்றினுர்கள். இதற்காக அவர்கள் சில திருத்தங்களையும் கொண்டு வந்தார்கள். அவை நிராகரிக்கப்பட்டன. இத்தகைய சூழ்நிலையில், தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறியதுடன், பின்பு அவர்கள் அதன் நடவடிக்கைகளில் பங்குபற்றவில்லை.

புதிய அரசியலமைப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவை கூட்டப்பட்ட பொழுது, தமிழ்ப்பாரளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசியலமைப்புக்கு விசுவாசப்பிரமாணம் செய்தார்கள். நட்டின் உயர்ந்த சபையை ஒரு மேடையாகப் பாவித்து, தங்கள் கோரிக்கைகளுக்காகத் தொடர்ந்து போராடும் ஒரே நோக்கத்துடனேயே அவர்கள் இவ்வாறு செய்தார்கள்— பெருப்பான்மை மக்கள் தமது குறைந்த பட்சக் கோரிக்கைகளையாவது ஒரு நாள் ஏற்றுக் கொள்வார்கள் என்று அவர்கள் எதிர் பார்த்தார்கள்—

உண்மையில் தமிழ் உறுப்பினர்கள் புதிய அரசியலமைப்புக்கு தமது அடையாள எதிர்ப்பைக் காட்டும் முறையில் மக்கள் முன்னிலையில் அச்சட்டப் பிரதியை தீயிட்டுக்கொளுத்தினுர்கள். தலைகளை எண்ணுவதால் மட்டும் மக்களின் அதிகாரத்தை நிலை நாட்ட முடியாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. கேள்வி என்ன வென்றுல்— தமிழ் நாட்டினத்தில் பெரும்பான்மையோர் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளுகிறுர்களா? என்பது தான். அதைப் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம்தான் உறுதி செய்ய முடியும். ஆனுல் அது நடைபெறவில்லை. எனவே, புதிய அரசியல் சட்டம், முந்திய சட்டத்திலிருந்து தொடர்பாக முகிழ்த்தெழுது அல்ல; மக்களின் அதிகாரத்திலிருந்து அது உருவானதென்பதும் செல்லுபடியற்ற வாதம்; ஆகவே அரசியலமைப்பு சட்ட விரோதமானது; அச்சட்டத்தின் கீழ் உருவான இந்நீதிமன்றமும் செல்லுபடியாகாது."

சட்டத்தரணிகள் எடுத்துக் கூறிய காரணங்களிருந்து சுருக்கமாக இவ்வளவையும் கூறி விட்டு அந்த நீதிமன்றத் தீர்ப்பு தொடர்ந்தும் பின்வருமாறு கூறியது.

What we have set out above is a brief resume of the submissions and arguments advanced by the defence, It will be apparent here that what we are being invalid to decide is a purely political question. A political question cannot be converted into a legal question by asking a judge to express his opinion about it. We would adhere to that salutary guiding principle which the highest judicial tribunals have time and again laid down that the courts should not concern themselves with policy but only with the law."

மொழிபெயர்ப்பு

"எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களையும் கருத்துக்களையும் சுருக்கமாகத் தொகுத்துத் தந்திருக்கிறோம், முழுக்க அரசியல் பிரச்சினையொன்றுக்கு தீர்வு சொல்லுமாறு நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம். அரசியல் பிரச்சினையாக மாற்றி அது பற்றி நீதவான் கருத்தைக் கேட்பது முடியாத காரியம், நீதி மன்றங்கள் கொள்கைகள் பற்றி அக்கறைகாட்ட முடியாது; சட்டத்தைப்பற்றி மட்டுமே அக்கறைக்காட்ட முடியும்."

இது ஓர் அரசியற் பிரச்சினை; சட்டப்பிரச்சினையல்ல, ஆனபடியால் தாம் இதுபற்றி எந்தத் தீர்ப்பும் வழங்கவில்லை என்று அந்த நீதிபதிகள் கூறினார்கள்.

அதன் பின்பு அரசாங்கம் இத் தீர்ப்புக்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தது. ஆனால் என்ன காரணத்துக்காகவோ, உயர் நீதிமன்றத்திலே அந்தத்தீர்ப்பு மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று வாதிட்டுக்கொண்டிருந்த அந்த நேரத்திலே, நாட்டின் சட்டமா அதிபதி, "இந்த எதிரிகள் மீதான வழக்கை நாம் வாபஸ் பெறத்தீர்மானித்து விட்டோம்; ஆனபடியால் அதைப் பற்றியல்ல நாம் இங்கே கூறுவது" என்று உயர் நீதிமன்றத்திலே கூறும் சூழ்நிலை ஏற்பட்டது. ஏனென்றால், அரசாங்கத்தின் அவசரகாலச் சட்டம் அத்தனையும் செல்லாமல் ஆக்கப்பட்ட சூழ்நிலையிலே அரசாங்கம் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்திலே, அவர்கள் எப்படியாவது அந்தத் தீர்ப்பை மாற்றியமக்கச் செய்ய வேண்டுமென்ற காரணத்தால் இப்படிக்கூட அந்த நீதிமன்றத்திலே கூறப்பட்டது. நீதிமன்றம் அந்தத்தீர்ப்பை மாற்றினாலும் எமக்கெதிரான வழக்கு கைவிடப் பட்டது.

மக்கள் ஆணை

அதன் பின்பு 1977 ஆம் ஆண்டு தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் முன்னிலையில் நாம் ஒரேயொரு கட்டளையை நாடிச் சென்ருேம். எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்து வாசிக்கின்றேன்:

"எனவே எதிர்வரும் பொதுத்தேர்தலில் இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற, சமதர்ம தமிழ் ஈழ அரசை நிறுவுவதற்கு தமிழ்த் தேசிய இனத்தின் கட்டளையை தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கிறது.

தமிழ் இனத்தின் இறைமை யாருக்கும் தத்தம் செய்யப்படவில்லை

இதுதான் தேர்தல் நேரத்திலே மக்களிடம் நாங்கள் கேட்ட கட்டளை. இக்கௌரவ சபையிலே நேற்று உரையாற்றிய கௌரவ பிரதம அமைச்சரவர்கள் தமக்கு மக்கள் அளித்த கட்டளையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் புதிய அரசியலமைப் பொன்றையாப்பதற்கு மக்களிடத்தில் கட்டளையைப் பெற்ருர்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே சந்தேகத்திற்கிடமில்லாமல் அது இடம் பெற்றிருக்கிறது. நேற்று கௌரவ பிரதம அமைச்சரவர்கள் வாசித்தது போல, அவர்களுடைய ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே,

"We seek your mandate to draft, adopt and operate a new Republican Constitution in order to achieve the goals of a democratic socialist society."

ஒரு சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு மக்களின் கட்டளையை அவர்கள் பெற்ருர்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்திலே இந்நாட்டின் தமிழ் மக்களுடைய பிரச்சினையைப்பற்றி ஐக்கிய தேசியக் கட்சி அதனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பின்னர் அதன் கொள்கை விளக்கவுரையிலும் கூறியவற்றையும் நான் இங்கே வாசித்துக்காட்ட விரும்புகிறேன்:

"The United National Party accepts the position that there are numerous problems confronting The Tamil-Speaking people. The lack of a solution, to their problems has made the Tamil-speaking people support even a movement for the creation of a separate State. In the interest of national integration and unity so necessary for the economic development of the whole country the Party feels such problems should be solved without loss of

time. The Party, when it comes to power, will take all possible steps to remedy their grievances in such fields as (1) Education; (2) Colonisation; (3) Use of Tamil Language; (4) Employment in the public and semi-public Corporations, We will summon an All-Party Conference as stated earlier and implement its decisions."

இந்த வாக்குறுதியை அரசாங்கக் கொள்கை விளக்க உரையிலும் திரும்பக் கூறினர்கள்.

"My Government will summon an All-Party Conference and implement its decision,"

இந்த அடிப்படையிலே ஓர் அரசியலமைப்பை யாக்கத் தொடங்க முன் அதற்கு முன்னேடியாக இந்த நாட்டிலேயுள்ள இரு தேசிய இனங்களுக்குமிடையிலான ஆளும் உரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலே வழிவகைகளைக் கண்டிருக்கவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் தவறிவிட்டது. அந்த வகையிலே நடவடிக்கை எடுக்காது வேறு காரணங்களுக்காக அவசரத்தில் இந்த அரசியலமைப்பு யாக்கப்பட்டிருக்கிறது.

### தமிழ் தேசிய இனத்தின் சார்பில் அரசியல் அமைப்பை ஆக்கும் உரிமை இச்சபைக்கு இல்லை

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த அரசியலமைப்பு யாக்கப்பட்ட பின்னணியை எடுத்துக் கூறிக்கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில் இந்த அரசியலமைப்பு விவாதத்தை ஒட்டி எமது நிலையை எடுத்துக்கூறக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன். நான் ஆரம்பத்தில் கூறியதுபோல இன்று நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள மறுத்தோம். அதை நிராகரித்தோம். அது எம்மைக் கட்டுப்படுத்தாது என்று கூறினேம். அதற்கு விரோதமாக மக்கள் தீர்ப்பைப் பெற்றேம். அதை நிராகரித்த காரணம் இறைமையுள்ள தேசிய இனமாக தமிழ்த் தேசிய இனத்தின் சார்பிலே அவர்களின் சம்மதம் இன்றி ஓர் அரசியல் அமைப்பை யாக்கும் உரிமை இந்தச் சபைக்கு இல்லை என்பது எமது நிலை. அதைத் தெளிவாக இந்த இடத்தில் நான் கூறிவைக்க விரும்புகிறேன். ஓர் இனத்தின் இறைமையை மூன்று வகையில்தான் அழிக்கமுடியும்.

ஒன்று, ஓரினம் தானுகச் சம்மதித்து அந்தச் சம்மதத்தின் பேரில் அதன் இறைமை இன்னெரு தேசிய இனத்தின் இறைமையோடு இணைந்து ஒன்றுபட்ட இறைமையாக அது அமைவது; அல்லது ஒரு தேசிய இனத்தின் இறைமை யுத்தக் களத்தில் அந்த இனம் வெற்றி கொள்ளப்பட்டு அடிமைப்படுத்தப்படுவதால் அதனுடைய இறைமை

இல்லாதொழிவது; மூன்றாவதாக, அப்படியான சூழ்நிலையில் ஆக்கப்பட்ட அரசியல் அமைப்பின் கீழ் சட்டரீதியாக அந்த இறைமை இல்லை என்ற நிலை நிலைநாட்டப்படல்.

அரசியலமைப்பை ஆக்க உரிமையில்லை.

இன்றைக்கு இந்தத் தேசிய அரசுப்பேரவை இயங்குகின்ற அரசியல் அமைப்பு இந்த மூன்று துறைகளிலும் தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்த அளவில் செல்லுபடியற்றது என்பது எமது நிலை. ஆனபடியால் இந்தத் தேசிய அரசுப் பேரவைக்கு தமிழ் தேசிய இனத்தின் சார்பில் ஓர் அரசியல் அமைப்பை யாக்க உரிமை இல்லை என்பதைத் தான் நாங்கள் கூறுகிறோம். அதனால் தான் முன்பு அரசியலமைப்புக்கு இரண்டாவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது அந்த விவாதத்திற் கலந்துகொள்ள நாம் மறுத்தோம். அந்த விவாதத்தின் போது தங்களுக்கு ஞாபகம் இருக்கும் சபாநாயகர் அவர்களே, தங்களின் அனுமதியோடு இந்தச் சபையில் ஓர் அறிக்கையை வெளியிட்டுவிட்டு நாங்கள் அந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமல் வெளியேறினோம்.

1977 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நான்காம் தேதி இந்தச் சபையில் நான் கூறிய வார்த்தைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"I am very thankful to you for giving me this opportunity to make this statement.

The secondment amendment to the Constitution, which is before the House today, makes important and far-reaching changes in the structure of government and and the seat of political power in this country. It therefore becomes necessary that I should place before this House, the country, and the world the attitude of the TULF and the Tamil nation towards the Republican Constitution adopted on 22nd May, 1972 and the amendments of the Constitution in very precise terms.—

The last Government, purporting to act on a mandate they had received from the people of Sri Lanka, adopted and enacted the present Constitution. The representatives of the Tamil people, who were in various political parties, participated in the deliberation of the Constituent Assembly and moved amendments to the basic resolutions in the hope of securing the inclusion of their rights in the Constitution. All these amendments were rejected. The Members of the Federal Party walked out of the Constituent Assembly. and our late leader, Mr. Chelvanayakam, remarked, 'This Constitution gives all rights to the Sinhalese people, it gives nothing to the Tamil people.'

As a result of the intransigence of the Government, representatives of all Tamil political parties, viz. the Elankai Tamil Arasu Kadchi, the All-Ceylon Tamil Congress, the Ceylon Workers' Congress, the Ela Thamil Othumai Munnany, the Tamil Students' Organization and several out standing Tamils, including the two Tamil Members of Parliament in the U. N. P. at the time formed the T. U. F. in Trincomalee on the 14th May, 1972."—

The two Members in the U. N. P. at that time were the present Minister of Justice and the then Member for Paddiruppu (Mr. Thambirajah).

—"The TUF called upon the Tamil Members of Parliament to boycott the final sitting of the Constituent Assembly. in response to this appeal, 15 out of 19 elected Tamil Members boycotted the Constituent Assembly. They refused to be parties to the adoption and enactment of this Constitution. The present Hon. Minister of Justice was one of those who boycotted the sittings of the Constituent Assembly as a Tamil Member of the U. N. P. While the others celebrated the proclamation of a Republic, the Tamil nation mourned the denial of their rights and the removal of even the meagre safeguards against discriminatory legislation enshrined in the Soulbury Constitution. They met in public and made a bonfire of the Constitution as a token of their refusal to accept the chains of slavery imposed on them by it.

The TUF put forward a six-point demand for the amendment of the Constitution. The last Government failed to respond to this unanimous request of the Tamil people. "—(Official Report, 4th October, 1977; Vol. 23, cc. 1285-6.)

I do not want to read the whole of it.

As I said earlier, we of the TULF were returned to this House to work for the freedom of the Tamil nation. The Amendment before this House does not even touch the problem of the Tamil people. The Prime Minister has informed the National State Assembly that a Select Committee will be appointed to examine other amendments to the Republican Constitution referred to in the political manifesto of the United National Party. A number of these matters could directly affect the Tamil-speaking people. The TULF will formulate its position on the proposed Select Committee when its terms of reference and power are clearly and explicitly defined. The

United National Party promised to ensure in the new Republican Constitution that every citizen, whether he belongs to a majority or minority, racial, religious or caste group, enjoys equal and basic human rights and opprotunities Far from these rights being ensured we have lost even the right to live. Under these circumstances the TULF has decided not to participate in this Debate on the Second Amendment to the Constitution "

Let this not be interpreted as an attempt on our part to run away from our responsibility. Our responsibility is by our people and that is to win back then our people and that is to win back their we shall not fail in this sacred duty." (Official Report, 4th October, 1977, Vol. 23, cc. 1291-2.)

நடவடிக்கைக் குழுத் தீர்மானம்

கௌரவ சபாநாயகரவர்களே, சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆந் தேதி இந்த வார்த்தைகளைக் கூறி விட்டுந்தான் அரசியலமைப் பின் இரண்டாவது திருத்தத்திலே நாங்கள் கலந்து கொள்ளாது விட்டோம். அதன்பின் இந்த அரசாங்கம் அரசியலமைப்பைத் திருத்து வதற்காக தெரிகுழுவொன்றை நியமித்தது. அந்தத் தெரிகுழுவிலே நாங்கள் பங்கு பற்றுவதா அல்லவா என்பதை நாங்கள் யோசிக்க வேண்டியவர்களாக இருந்தோம். தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைகள் எல்லோரினதும் சம்மதத்தின் அடிப்படையிலும் தீர்த்துவைக்கப் பட்டு ஏற்றுக்கொள்டப்பட்ட ஒரு முடிவின்பின் தெரிகுழு நியமிக்கப் பட்டிருந்தால், எமக்கு ஏற்புடைத்தான ஒரு தீர்ப்பை அமுல் நடாத்து வதற்கான ஓர் அரசியல் அமைப்பைத் தயாரிப்பதற்கு அந்தத் தெரி குழு நியமிக்கப்பட்டிருந்தால் நாங்கள் அதிற் பங்கு கொள்வதுபற்றி யோசித்திருப்போம். ஆனல், தமிழ்த் தேசிய இனத்தைப்பற்றிய பிரச்சினைகள் குறித்து எவ்வித முடிவும் எடுக்காத கட்டத்திலே எம்மை அந்தத் தெரிகுழுவிலே கலந்து கொள்ளும்படி அழைத்த பொழுது— கௌரவ பிரதமர் அவர்கள் அன்புடன் அழைத்தார்கள்—நாம் அதிற் கலந்து கொள்ள மறுத்தோம். அந்த நேரத்திலே எமது தமிழர் விடுதலைக் கூட்டணியினது நடவடிக்கைக் குழு நிறைவேற்றிய தீர்மானம் அந்தக் காரணங்களைத் தெளிவாகக் காட்டுகிறது.

"தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் ஈழ விடுதலையைக் காண்பதே இலட்சியமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட காரணத்தினுலும்—

தேர்தலின் பின் இந்த நாட்டில் நடந்து முடிந்த வன்முறைச் சம்பவங்கள் தமிழ் ஈழ இலட்சியம் தவிர வேறெதுவும் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பையும் நல்வாழ்வையும் தரமாட்டாது என்பதை உறுதிப்படுத்துவதனுலும்—

இவ்வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதையொட்டி அரசும் அதன் நிருவாக இயந்திரமும் மாற்றான்தாய் மனப்பான்மையோடு நடந்து வருவதனாலும்—

தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பையும், அதன் பின்பு நாட்டில் நடந்த சம்பவங்களின் தாக்கத்தையும் கருத்துக்கு எடுத்து தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் அவசரமும் அரசுக்கு இருப்பதாகத் தோன்றாதபடியாலும்—

ஐக்கிய தேசிய கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் தானும் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு முன்பு சர்வ கட்சித் சம்மதத்தைப் பெற்று தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படாதபடியாலும்—

இச் சூழ்நிலையில் அமைக்கப்படும் பாராளுமன்றத் தெரிவுக்குழு இந்த நாட்டிலுள்ள இரு தேசிய இனங்களுக்கு இடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கும் தகுதியோ சூழ்நிலையோ இருப்பதாகத் தோன்றாதபடியாலும்—

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பை மாற்றி அமைப்பதற்கான தெரிவுக் குழுவில் கலந்து கொள்வதில் எவ்வித பயனும் இல்லையென்று இந் நடவடிக்கைக் குழு கருதி அக் குழுவில் கலந்துகொள்ள வேண்டாமென்று பாராளுமன்றக் குழுவைப் பணிக்கிறது.''

எமக்கு எமது கட்சியினிடைய செயற்குழு இட்ட கட்டளைப்படி நாம் அந்தத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ளாமல் விட்டோம் அந்தத் தெரிவுக் குழுவில் யாக்கப்பட்டதாகக் கூறப்படும் அரசியலமைப்புத் தான் இப்பொழுது இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, தெரிவுக்குழுவின் அறிக்கையோடு ஓர் அரசியலமைப்பு யாப்பு இந்த சபையிற் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அந்த யாப்பிலே இல்லாத சில பகுதிகள் இப்பொழுது நாம் விவாதிக்கும் சட்டமூலத்தில் இடம் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம். இன்று நாம் விவாதிக்கும் அரசியலமைப்புச் சட்டமூலத்தின் 20 ஆம் 21ஆம் அத்தியாயங்கள் தெரிவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட யாப்பில் இருந்தவையல்ல. ஆனால், இந்த இரண்டு அத்தியாயங்களும் மிகமிகப் பாரதூரமான மாற்றங்களையும் தாக்கத்தையும் ஏற்படுத்துவனவாக இருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

அப்படியானால் தெரிவுக் குழுவை அமைத்த நோக்கம் என்ன? அது வெறும் கண் துடைப்பா? தெரிவுக்குழுவொன்றை வைத்து அந்தத் தெரிவுக் குழு அரசியலமைப்பை யாத்ததாக கூறிவிட்டு, அதன் பின்

தெரிவுக் குழுவுக்கு அப்பாற்சென்று வேறுபல திருத்தங்களைக் கொண்டதாக ஓர் அரசியலமைப்பைக் கொண்டு வருவதில் என்ன நோக்கம் இருக்கிறது என்பதை நாம் யோசிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

20 ஆம் அத்தியாயம் எமக்கு மிக முக்கியமானது. இந்த அரசியலமைப்பின் 157 ஆம் விதி எல்லோரும் கவனிக்க வேண்டிய ஒன்று. இந்த விதி வருங்காலத்தில் எந்த ஓர் அரசாங்கமும், எந்த ஒரு கட்சியும் தாம் ஓர் அரசியல் நிர்ணய சபையை அமைத்து ஒரு புது அரசியல் திட்டத்தை யாப்பதற்கு அனுமதிகோரும் உரிமையை மறுக்கிறது. 157ஆம் விதியின் கீழ், 1970 ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டுக் கட்சிகளும் கேட்டதுபோல் இனி அடுத்துவரும் ஒரு தேர்தலில் ஓர் அரசியல் கட்சி 12 ஆவது அத்தியாயத்துக்கு வெளியே போய் மக்களின் ஆணையைப் பெற்று ஓர் அரசியல் நிர்ணய சபை மூலம் ஒரு புது அரசியலமைப்பை யாப்பதற்கு உரிமை வேண்டும் என்று கேட்கும் உரிமைகூட மறுக்கப்பட்டிருக்கிறது.

சனநாயக உரிமை பறிக்கப்படுகிறது.

இது மக்களின் சனநாயக உரிமையைக் கட்டுப்படுத்தும் மிகப் பாரதூரமான ஒரு சட்டம். மக்களின் இறைமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தக் கூடாது என்றால் மக்கள் தங்கள் வாக்கினால் அரசியலமைப்பை ஓர் அரசியல் நிர்ணய சபை மூலம் திருத்துவதற்கு உரிமை அளிக்க, அரசியற் கட்சிகள் அந்த உரிமையைக் கேட்க ஏன் அரசியற் கட்சிகளுக்குச் சட்டபூர்வமான தடையிருக்கவேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. ஆனபடியால், இதன் பலாபலன் மிகவும் பாரதூரமானதாக இருக்கும். இப்பொழுது கொண்டு வரப்போகும் தேர்தல் முறை, எந்த ஒரு கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப்பெறுமல் தடுத்து விடும் என்பது எங்களுக்குத் தெரியும். எந்த ஒரு கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுமல் தடுத்துவிட்டு, அப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றாலும் எந்த ஒரு கட்சியும் இந்த அரசியலமைப்பை, 12 ஆவது அத்தியாயத்தின்படி, திருத்த இடமில்லாமற் செய்துவிட்டு 12ஆம் அத்தியாயத்திற்கு வெளியே போய் அரசியலமைப்பைத் திருத்த வேண்டுமென்று கேட்பதே கேட்க வேண்டுமென்று கூறுவதே சட்ட விரோதம், அப்படி கூறுபவரை அது பத்து ஆண்டு சிறைவாசத்துக்கு உள்ளாக்கும். அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் அப்படிக் கூறுவது அவர் பதவியை இழக்கச் செய்யும் குற்றம், ஓர் அரசியல் கட்சி கூறினால் அது அந்தக் கட்சியினுடைய வேட்பாளர் பட்டியலையே ரத்து செய்யக்கூடிய குற்றம் என்று விதித்து வைத்து, இந்த நாட்டிலே, வருங்காலத்திலே மிகவும் பாரதூரமான அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு விதியாக அது ஆக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் கூறிவைக்க விரும்புகிறேன். எங்கே கட்டுப்பலமாக இருக்கிறதோ—எங்கே சனநாயக ரீதியாகக் கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறதோ—

அங்கே வெடிப்பு ஏற்படுகிறது. உடைப்பு ஏற்படுகிறது; அங்கே பிரளயம் ஏற்படுகிறது; அங்கே புரட்சி ஏற்படுகிறது. அந்தவிதமான ஒரு சூழ்நிலைக்கு உட்படுத்துகின்ற ஒரு விதியாக—தெரிவுக்குழுவினாற்கூட ஆராயப்படாத ஒரு விதியாக இது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இச்சபையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எந்த காலத்திலாவது நாங்கள் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக் கொண்டு இந்த அரசியலமைப்பை மாற்றி எங்களுடைய உரிமையைப் பெற முடியாது. ஏனென்றால் நாம் எமது உரிமையைப் பெறுவதற்கு இந்நாட்டிலே சிளர்ச்சி செய்யத்தான் வேண்டும். இந்த நாட்டிலே நாங்கள் அமைதியான முறையிலே மக்கள் மத்தியிலே பிரசாரம் செய்யத்தான் வேண்டும். இந்த அரசியலமைப்பை மாற்ற வேண்டும். எமது இறைமையை நிலைநாட்டப்பட வேண்டும். எமது உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும். இதற்காக நாம் கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும். சனநாயக ரீதியாக, சாத்வீக முறையிலே கூடக் கிளர்ச்சி செய்வதற்கு, அதை மாற்ற வேண்டுமென்று வாதாடுவதற்கு உரிமையை மறுக்கின்றது இது. இங்கேதான் இந்த விதியின் இரண்டாவது தாக்கம். அது மாத்திரமின்றி 1976 ஆம் ஆண்டு நாம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுத்தபோழுது முந்திய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்த சட்டவிதிகளை, இந்த அரசாங்கம் அரசியலமைப்பிலேயே கொண்டு வருகின்றது, 157 ஆவது விதியின் கீழ். ஒருவேளை இது நடைமுறைக்கு வந்தபின்பு அரசாங்கம் விரும்பிய நேரத்திலே என்னையும் எனது சகாக்கள் அத்தனை பேரையும் அடைக்கலாம்; நீதிமன்றத்திலே நிறுத்தலாம்; 10 வருடங்கள் எங்களைச் சிறைக்கு அனுப்பலாம்; சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம். ஆனால், இந்தச் சட்டமூலத்தையும் தெரிந்து கொண்டுதான் சென்ற வாரம் இறுதியிலே ஞாயிற்றுக்கிழமை கூடிய எமது கட்சியினுடைய மகாநாட்டிலே நாம் முடிவு எடுத்திருக்கின்றோம். என்ன பலன் கிடைத்தாலும், என்ன தண்டனை எமக்குக் கிடைத்தாலும் அவற்றால் நாம் அச்சுறுத்தப்பட மாட்டோம். அவற்றுக்கு நாம் அடிபணியமாட்டோம் என்று. எமது இலட்சியத்தை — எமது இனத்தின் விடுதலைக்காகிய இலட்சியத்தை நோக்கிச் செல்வதற்கு, அதனால் வருகின்றபலாபலன் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு செல்வதற்கு நாம் தீர்மானித்திருக்கின்றோம் என்பதை நான் இவ்விடத்திலே கூறி வைக்க விரும்புகிறேன்.

நான் இதனை இச்சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டுவதன் நோக்கம் என்னவென்றால் எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சர்வகட்சிச் சம்மத அடிப்படையிலே எம்முடன் பேசி ஒரு பரிகாரத்தைக் காணவோ எந்தவிதமான ஒரு முடிவும் எடுக்கவோ தவறிய ஒரு சூழ்நிலையிலே— அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே கூறப்பட்ட அடிப்படையிலே கூட இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாத ஒரு சூழ்நிலையிலே—நாம் நமது இறைமையை நிலைநாட்டக் கிளர்ச்சி செய்கின்ற சூழ்நிலையிலே,

தெரிகுழுவுக்கும் தெரியாமல் தெரிகுழுவுக்கு அப்பால் போய் இப்படி ஒரு விதியை—20 ஆம் அத்தியாயத்திலே கூறப்பட்டிருக்கின்ற 157 ஆவது விதி போன்ற ஒரு விதியைக்கொண்டு வருகின்ற இந்த அரசியலமைப்பின் விவாதத்திலே, இந்த அரசியலமைப்புக்கு ஆதரவாக நாம் எப்படிக் கலந்து கொள்ளமுடியும் என்று பகுத்தறிவு படைத்தவர்களை நான் இச்சந்தர்ப்பத்திலே கேட்க விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகரவர்களே, புரட்சியின் வித்து இந்த விதியிலே விதைக்கப்பட்டிருக்கிறது. இதனை நான் ஒரு பயமுறுத்தலாகக் கூற விரும்புகிறேன். மற்ற நாடுகளின் அரசியல் வரலாற்றை அறிந்தவன் என்ற முறையிலே இப்படி சனநாயக ரீதியான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வழி வகைகளை அடைத்து, இறுக்கமாகக் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்புகள் தான் பல நாடுகளிலே புரட்சிகளுக்கு வழி வகுத்தன என்று நான் இச்சந்தர்ப்பத்திலே மிகப் பொறுப்புணர்ச்சியோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். அது மாத்திரமல்ல. தெரிவுக்குழுவுக்கு வெளியால் ஏனைய எல்லா விதிகளையும் விளக்கிப் பேசினார்கள் கௌரவ பிரதம அமைச்சரவர்கள் நேற்று இச்சபையிலே. ஆனால், 20 ஆம் அத்தியாயத்திலே 157 ஆம், 158 ஆம் விதிகளைப் பற்றி விளக்காமலும் அதனைப் பாராமலும் ஒதுங்கி நின்று தமது விளக்கங்களை அளித்ததிலிருந்து அவற்றிலே சிக்கல்கள் இருக்கின்றனவென்பதை பிரதம அமைச்சரவர்களே நன்கு அறிந்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

இந்த 158 ஆவது விதி உரிமைச் சாசனம் யாருக்கு? வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கும் வெளிநாட்டு மூலதனம் இடுவோருக்கும்தான். இலங்கையில் வெளிநாட்டவருக்கு இந்த நாட்டவர்களுக்கு இல்லாத உரிமைகள் எல்லாம் அளிக்கின்ற உரிமைச் சாசனம்தான் இந்த இருபதாவது அத்தியாயத்தில் 158 ஆவது விதி.

நான் நினைக்கவில்லை கௌரவ சபாநாயகர் அவர்களே, சிங்கப்பூரில் கூட இப்படி ஒரு விதி வைத்திருக்கிறார்கள் என்று. இந்த விதியின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரத்தோடு ஒரு வெளிநாட்டிற்கு உரிமை கொடுத்து ஓர் ஒப்பந்தம் எழுதலாம். இப்படி ஒரு ஒப்பந்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இந்தச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது அரசியல் அமைப்பின் ஓர் அங்கமாக வரும். அப்படித்தான் இந்த விதி கூறுகிறது—

"Such treaty or agreement shall have the force of law in Sri Lanka and no written law shall be enacted or made and executive or administrative action shall be taken in contravention of such treaty or agreenent."

கிட்டத்தட்ட அரசியல் அமைப்பின் ஓர் அங்கம்போல் அது கருதப்படும், அதற்கு விரோதமாக எந்தச் சட்டமும் நிறைவேற்றப்பட முடியாது. வருங்காலத்தில் ஓர் அரசாங்கம், நான் ஆரம்பத்தில் சொன்னது போல மூன்று இரண்டு பெரும்பான்மையிடன் வரமுடியாது. புதிய தேர்தல் முறையால் எந்த ஒரு கட்சியும் இனிமேல் மூன்றில் இரண்டு பெரும்பான்மைபெற முடியாது அப்படியானால் எந்த ஒரு கட்சியும் இந்த விதியைத் திருத்த முடியாது அப்படியானால் மக்கள் கட்டளை இட்டாற்கூட வருங்காலத்தில் பதவிக்கு வருகின்ற எந்தக் கட்சியும் வெளிநாட்டுடன் செய்துகொண்ட இத்தகைய ஓர் ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியாது. அத்தகைய ஒப்பந்தத்துக்கு விரோதமாக யாரும் போக முடியாது அத்தகைய ஒப்பந்தம் எத்தன்மைத்தானதாயும் இருக்கலாம். இதில் கூறப்படுகின்றது வெளிநாட்டினுடைய பிரசைகளை, அதாவது இந்த நாட்டில் வசிப்பவர்களை பாதுகாப்பதற்கான ஒப்பந்தமாகவும் அது இருக்கலாம் என்று. அப்படியானால் ஒரு நாடு இங்கு முதலீடு செய்திருக்கும் தனது பிரசைகளைப் பாதுகாக்க தனக்கு ஒரு படை வைத்திருக்க உரிமை வேண்டுமென்றும் ஒரு ஒப்பந்தம் எழுதலாம். அதற்கு தடை இல்லை. அப்படி ஓர் ஒப்பந்தம் எழுதினாற்கூட அதை மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இச்சபை ஏற்றுக்கொண்டால் வருங்காலத்து மக்கள் அதற்கு விரோதமாக நின்றாலும் கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத இடத்து அதை நீக்க முடியாது. அதை இரத்துச் செய்யவும் முடியாது. இது உண்மையில் ஒரு மோசமான சூழ்நிலை.

வெளிநாட்டு மூலதனத்தை முடக்குவோருக்கு, வெளிநாட்டுத் தலையீட்டிற்கு மிகப்பாரதூரமான வகையில் வழிவகுக்கும் ஒருவிதி இந்த விதி என்பதை இந்தச் சபை அங்கத்தினர்களுள் எத்தனைபேர் உணர்ந்து இருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. விசேடமாக, இளம் அங்கத்தவர்கள், பின்வரிசை அங்கத்தவர்கள் இந்த விதியைப் படிக்க வேண்டும். படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். வரும்காலத்தையே அடகு வைக்கும் ஒரு விதி. இது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் நாமும் இதனால் பாதிக்கப்படுகின்ற மக்கள் என்ற வகையில் இதைச் சுட்டிக் காட்டவேண்டிய கடமை எனக்குள்ளது. இந்த நாட்டு எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலும் இந்தப் பாரதூரமான தாக்கத்தை சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமை.

கௌரவ சபாநாயகரவர்களே, இந்தத் தெரிகுழு என்ற குழுவை வைத்துவிட்டு, அதற்குத் தெரியாமல் கொண்டு வரப்பட்ட இருபதாவது அத்தியாயமும், இருபத்தோராவது அதியாயமும் மிக விசித்திரமான, வேடிக்கையான அத்தியாயங்களாகும். உண்மையாக ஒருவேளை இந்தச் சபையிலே இருக்கிற

எங்களுக்கு கட்சிகளாகத் தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிற எங்களுக்கு, அதனுல் தொல்லை இல்லாமல் இருக்கலாம். ஆனுல், மக்கள் ஓர் இடைத்தேர்தலிற் கூட தமது கருத்தை எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்பை மறுக்கின்ற விதிகள் இருபத்தோராம் அத்தியாயத்தில் அடங்கியிருக்கின்றன. மக்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் ஓர் இடைத்தேர்தலிலே தமது கருத்தை மக்கள் கூற முடியாது. ஏனெனில் இடைத்தேர்தலே நடக்காது. இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற தேர்தல் வழக்குகளிலே யாராவது அங்கத்தவர் தமது பதவியை இழந்து அதனுல் இடைத்தேர்தல் வந்தாலே யாழிய எந்த அங்கத்தவராவது முன்பு எங்கள் இன்றைய சனுதிபதி அவர்கள் 1975ஆம் ஆண்டு செய்ததுபோலத் தம்முடைய பதவியை ராஜிநாமாச் செய்து, "நான் ஒரு கொள்கையிலே மக்களின் தீர்ப்பைக் கேட்கப்போகிறேன்" என்று முடிவு செய்தாலோ ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்த முடியாது.

கடந்த பாராளுமன்ற ஆயுட் காலத்திலே எந்த உரிமையை பெருமையோடு இன்றைய சனுதிபதி அவர்கள் நடைமுறைப்படுத்தி மக்களின் உரிமையை நிலைநாட்டினுர்களோ அந்த உரிமையை இன்று இந்தப் பாராளுமன்றத்திலே இருக்கின்ற அங்கத்தினர்களுக்கு மறுக்கப்படுகிறது. எந்த அங்கத்தவரும் அரசாங்கத்தில் அரசாங்கக் கட்சி அங்கத்தினராக இருக்கலாம். அவர் அரசாங்கம் செய்வது தவறு என்று நினைக்கலாம். மனச்சாட்சி உள்ளவர்கள் இருக்கிறுர்கள். கட்சி யந்திரத்துக்குக் கட்டுப்பட மறுப்பவர்கள் இருக்கிறுர்கள் தவறு என்று நினைக்கிற ஒன்றை வைத்து, "சரி நான் மக்களின் தீர்ப்பைக் கோரப்போகிறேன்" எனக் கூறுகிறவர்கள் இருக்கிறுர்கள். வெளியே போய் பதவியை ராஜிநாமா செய்து ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்த அவர்களால் முடியாது. 1972 ஆம் ஆண்டு எமது கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்கள் ஒரு இடைதேர்தலை ஏற்படுத்தியதுபோல ஏற்படுத்த முடியாது. அப்படி ஒருவர் ராஜிஞமா செய்துவிட்டால் அவருடைய இடத்துக்கு அந்தக் கட்சி வேறொருவரை நியமிக்கும். அவர் எங்கிருந்து வந்தவராகவும் இருக்கலாம். ஒருவேளை அவர் கட்சித் தலைவருடைய சமையலறையில் வேலை செய்பவராகவும் இருக்கலாம், யாரையும் நியமிக்கலாம். கட்சி ஏற்றுக் கொண்டாற் சரி. அந்தத் தொகுதி மக்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. இது எவ்வளவு பாரதூரமானது என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சாதாரண அங்கத்தவர்கள் கட்சி நிர்வாகத்தின் கட்டளைக்கிணங்க யந்திரங்களாக மாற்றப்படுகிறுர்கள். அவர்களுடைய மனச்சாட்சிக்கு இடம் கிடையாது. அவர்கள் தங்களுடை மனச்சாட்சிப்படி கட்சியின் தலைமையை மீறிப்போக உரிமை கிடையாது. கட்சித் தலைமையை மீறிப் போனுல் பதவி இழப்பாரென்றும் வைப்பதை நான் ஆட்சேபிக்க

வில்லை. ஆனால், பதவியை விட்டுப் போய் மக்களின் தீர்ப்பைப்பெறுகிற உரிமைகூட மறுக்கப்படுவதாக இருந்தால் நிச்சயமாக அது சனநாயகம் அல்ல என்பதைக் கூறிவைக்க வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது. ஆளும் கட்சியினுடைய பின்வரிசை அங்கத்தவர்கள் இதை நிச்சயம் சிந்திக்கத்தான் வேண்டும்; அவர்களுக்குக் கைவிலங்கு போடப்படுகிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும் என்பதற்காகத்தான் தான் இதனைக் கூறிவைக்கிறேன். நான் சொல்வதால் அவர்கள் எல்லாவற்றையும் தப்பாக நினைத்துக் கொள்ளமாட்டார்கள் என்று நம்புகிறேன். நான் ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவன் என்ற வகையில்தான் நான் இதனைப் பின்வரிசை அங்கத்தவர்களுக்குக் கூறிவைக்க வேண்டியவனாக இருக்கிறேன். நான் இதனை பின்னர்மேலும் விளக்கிக் கூறுவேன்.

இப்பொழுது தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைகளைப் பொறுத்த வரையிலே இந்த அரசியலமைப்பில் மொழி விஷயத்தில் முன்பு இருந்ததிலும் பார்க்க முன்னேற்றம் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கிறேன்.

(திரு. கா. பொ. இரத்தினம்)

முன்பு இரும்பு விலங்கு. இப்பொழுது பொன் விலங்கு.

(திரு. ஏ. அமிர்தலிங்கம்)

இந்த முன்னேற்றத்துக்கு கௌரவ பிரதமர் அவர்கள் கூறியது போல ஆளும் கட்சி மாத்திரமல்ல, எதிர்க்கட்சியில் இருக்கிற முந்திய பிரதமரும் அவருடைய கட்சியும் கூட ஆதரவு அளித்தனர். அதனால்தான் அது நிறைவேற்றப்படக் கூடியதாக இருந்தது என்பதை அவர் எடுத்துக் கூறினார்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்நாட்டின் மொழிச் சட்டங்களின் வரலாற்றை நாம் சற்றுச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும். நாம் ஒவ்வொரு நாளும் அரசியலமைப்பை விவாதிக்கப் போவதில்லை. ஆனபடியால் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த விவாதத்திலே பல கடந்தகால நிகழ்ச்சிகளை, இந்தச் சட்டங்களின் வரலாற்றை, இந்த இரண்டு தேசிய இனங்களுக்குமிடையிலான பிரச்சினையின் பின்னணியை நான் எடுத்துக் கூறுவது எந்த வகையிலும் தவறாகாது.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் 1944ஆம் ஆண்டில் இன்றைய சனாதிபதி கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன அவர்கள் அரசாங்க சபையில் ஓர் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அவர்கள் கொண்டுவந்த தீர்மானம், சிங்களம் இந்த நாட்டின் ஆட்சிமொழி

யாக இருக்க வேண்டுமென்பதாகும். அதற்கு அப்போது திருகோண மலை—மட்டக்களப்புப் பிரதிநிதியாக இருந்த திரு. நல்லையா ஒரு திருத்தம் கொண்டு வந்தார். சிங்களமும் தமிழும் இந்நாட்டின் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டுமென்பதே அந்தத் திருத்தம். 1944ஆம் ஆண்டு அந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தத் திருத்தத்தின் அடிப்படையில்தான் அன்று தொடக்கம் ஆங்கிலத்தி லிருந்து இந்நாட்டு மொழிகளுக்கு மொழிமாற்று வேலை படிப்படியாக நடைபெற்றுக்கொண்டு வந்தது.

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பொழுது அந்த அந்த அடிப்படையில்தான் சுதந்திரம் வழங்கப்பட்டது. அதாவது, சிங்களமும் தமிழும் இந்நாட்டின் சமத்துவமான ஆட்சி மொழிகள் என்ற அடிப்படையில்தான் சுதந்திரம் வழங்கப்பட்டது. அந்தநேரத் தில், காலஞ்சென்ற முதற் பிரதமர் டி. எஸ். சேனநாயக்க அவர்க ளோடு ஒத்துழைத்து நாடு சுதந்திரமடைவதற்கு அவருக்குப் பக்க பலமாக இருந்த முன்னாள் வவுனியாப் பிரதிநிதி திருவாளர்கள் சுந்தரலிங்கம் அதைத் தெட்டத் தெளிவாக 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் இந்தச் சபையிலே விவாதிக்கப்பட்டபோது எடுத்துக் கூறினார். அந்த அடிப்படையில் பெறப்பட்டது சுதந்திரம். ஆனால், 1956 ஆம் ஆண்டிலே அந்த அடிப்படை தகர்க்கப்பட்டது. இந்த மொழி பற்றிய தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னாள் பிரதம நீதியரசரான திரு. எஸ். விஜயவர்த்தன அவர்களின் தலைமை யில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. [இடையீடு] பிரதமர் அவர்கள் ஈ. ஏ. எல். விஜயவர்த்தன என்று கூறுகிறார். அவர் சேர் பட்டம் பெற்ற பின்பு சேர் ஆதர் விஜயவர்த்தன என்று அறியப்பட்டார். அப்படிக் கூறினால் தெளிவாக இருக்குமென நினைக்கிறேன். அவருடைய தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 1955 ஆம் ஆண்டு ஒரு பெரும் குண்டைத் தூக்கிப்போட்டது.

இரண்டு மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்குவதற்கு வழி வகைகளைக் காண நியமிக்கப்பட்ட அந்தக் குழுவில்—தமிழ் உறுப்பினர் கள் தவிர—பெரும்பான்மையினர், இரண்டு மொழிகளையும் ஆட்சி மொழிகளாகக் கொண்டுவரமுடியாது, அதிலே சிக்கல்கள் உண்டு, ஆனபடியால் ஒரு மொழியைத்தான் ஆட்சிமொழியாகக் கொண்டு வர வேண்டும் என்று அக்குழுவினர் ஓர் அறிக்கை கொடுத்தனர். ஒரு தருணத்தை எதிர்பார்த்திருந்த காலஞ்சென்ற பண்டாரநாயக்க அவர்களுக்கு அது ஒரு தருணமாக வந்து வாய்த்தது. அவரும் சில மொழி வெறிச் சக்திகளும் சிங்களம் மட்டுந்தான் இந்நாட்டின் ஆட்சிமொழியாக வேண்டுமென்று ஒரு வெறியாட்டத்தைக் கிளப் பினர். அது வரைக்கும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமத்துவம்

என்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி 1956 ஆம் ஆண்டு ஏப்ரில் 18 ஆம் திகதி களனியில் கூடிய அதன் மகாநாட்டில் சிங்களம் மாத்திரம் என்னும் கொள்கையிடம் சரணாகதி அடைந்தது.

தமிழர்கள் ஐ. தே. க. விட்டு விலகினர்.

1956 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் தேதி களனி மகா நாட்டிலே சிங்களம் மாத்திரம் என்பதற்குச் சரணாகதியடைந்தார்கள். அப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த தமிழ் அங்கத்தவர்கள் அத்தனைபேரும்—முன்னைநாள் அமைச்சர் திருவாளர் சு. நடேசபிள்ளை, திரு. வீ. குமாரசாமி இப்படியானவர்கள்—ஏன் எங்கள் தலைவராகப் பின்பு வந்த திரு. இராசமாணிக்கம் அவர்கள்கூட—ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறினார்கள். ஐக்கிய தேசியக் கட்சி தேசிய கட்சி என்று தன்னை அழைத்துக்கொள்ளும் உரிமையை இழந்துவிட்டது என்று அவர்கள் அப்பொழுது கூறினார்கள். இந்தச் சிங்கள இன வாதத்துக்கு அடிபணிந்து தங்களுடைய தனித்துவத்தை இழந்துவிட மாட்டோம் என்று அவர்கள் அன்று கூறினார்கள். ஐக்கிய தேசியக் கட்சியிலேயிருந்து அல்பிரெட் தம்பையா போன்ற எல்லோருமே வெளியேறினார்கள் அன்று.

1956 ஆம் ஆண்டுத் தேர்தலிலே தமிழ் மக்களுடைய ஆதரவு அற்ற ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் போட்டியிட்டது. சேர் ஜோன் கொத்தலாவலையின் தலைமையிலே போட்டியிட்ட அந்த நேரத்திலேதான் ஐக்கிய தேசியக் கட்சி எட்டே எட்டு அங்கத்தவர்களுடன் இச்சபைக்குத் திரும்பி வருகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டது, பிரதம அமைச்சராக இருந்த ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக்கூட வரவில்லையே என்று, அத்தனகல்லைப் பாராளுமன்ற அங்கத்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவைச் சூசகமாகக் குறிப்பிட்டு, கௌரவ பிரதம அமைச்சரவர்கள் நேற்று இச்சபையிலே பேசினார்கள். ஆனால், 1956 ஆம் ஆண்டில் அந்தமாதிரியான ஒரு நிகழ்ச்சி நடந்தேறியது. பிரதம அமைச்சராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவலை அவர்களால் எதிர்க்கட்சித் தலைவராகக்கூட வரமுடியவில்லை அன்று. அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக வந்தவர் கலாநிதி என். எம். பெரேரா. எதிர்க்கட்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட இளைய அங்கத்தவனொருவனாக அன்று நான் வந்தவன் என்ற முறையில் எனக்கு மிக நன்றாகத் தெரியும் என்பதை கூற விரும்புகிறேன். எனவே அன்றும் ஒரு முறை அப்படி நடந்தது. 1956 ஆம் ஆண்டு நடந்த அந்தப் பிரளயத்திலே ஆளும் கட்சி, இருந்த இடம்கூடத் தெரியாமல் மறைக்கப்பட்டு, இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இருப்பதுபோல, எதிர்க்கட்சியிலும் மிகச் சிறிய தொகையினரோடு வந்திருந்தால், சமசமாசக் கட்சியின் தலைவராக இருந்த கலாநிதி என். எம். பெரேரா எதிர்க்கட்சித் தலைவராகவும் அடுத்த இரண்டாவது ஸ்தானத்திலே திரு. செல்வநாயகம் அவர்களின் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி இரண்டாவது பெரிய எதிர்ககட்சியாகவும் இருந்தது.

1956 ஆம் ஆண்டிலே சிங்களம் மாத்திரம்தான் ஆட்சிமொழி என்ற சட்டத்தைப் பிரதமர் பண்டாரநாயக்க அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அந்தச் சட்டத்திலே தமிழ் உரிமையைப் பற்றிச் சில பகுதிகள் சேர்க்கப்பட்டன. ஆனால், எனக்கும் இங்கேயுள்ள பலருக்கும் பேராசிரியராக இருந்த திரு. எவ். ஆர். ஜயசூரிய அவர்களும் திரு. கே. எம். பீ. இராசரத்தின அவர்களும் இச்சபைக்கு முன்னால் உள்ள மண்டபத்திலே குளுக்கோஸ் சாப்பிட்டுக்கொண்டு உண்ணாவிரமிருந்தார்கள். அவர்களுடைய உண்ணாவிரதத்துக்கு அடிபணிந்து, காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்க அவர்கள் தமிழ் மொழிக்கு எந்தவிதமான இடமுமளிக்காமல் சிங்களம் மாத்திரம் சட்டத்தை, ஒருவரிச் சட்டமாக, அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். 1956 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் தேதி அந்தச் சட்டத்தைக் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தை எதிர்த்து நாம் மிகவும் அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்தோம் — இன்று ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் எப்படி முன்னைய அரசாங்கத்தின் காலத்திலே அவர்களை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்ய முற்பட்டார்களோ அந்த விதத்திலே நாமும் சத்தியாகிரகம் செய்தோம்.

வெறுமனே, மழையிலே காலிமுகக் கடற்கரையிலே பச்சைப் புற்றரையிலே நாம் இருந்தோம். எமக்கு எதிராக முதல்முதலாக இனவெறி கட்டவிழ்த்துவிடப்பட்டது. காடையர்களை ஏவி விட்டார்கள். 300 பேரளவில் நாம் அங்கிருந்தோம். ஆயிரக்கணக்கில் காடையர் வந்தார்கள். எம்மை நாம் வருத்தி, மழையிலேயிருந்து எம்மை வருத்துவதன் மூலம் ஆட்சியாளரும் பெரும்பான்மையினமும் எங்களுக்கு நீதி, நியாயம் வழங்கவேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்தலாம் என்று நாம் அங்கே காந்திய வழியிலே சத்தியாகிரகம் செய்தோம். கௌரவ சபாநாயகரவர்களே, நான் இவற்றையெல்லாம் ஏன் குறிப்பிடுகிறேனென்றால், இப்பொழுது இங்கு இருப்பவர்கள் எல்லாம் அன்று சின்னப்பிள்ளைகளாக இருந்திருப்பார்கள். இந்தச் சரித்திரம் ஒருவேளை அவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். நாங்கள் அந்தக் கட்டத்திலே—அந்த நாடகத்திலே இவையெல்லாம் தேவைக்காகக் குறிப்பிடப்படவேண்டுமென்பதற்காக இச் சந்தர்ப்பத்திலே இவற்றை இங்கே கூற விரும்புகிறேன். இவ்வாறு நாம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட நேரத்திலே கட்டவிழ்த்து விடப்பட்ட காடையர்கள் எம்மைத் தாக்கினார்கள், என்னுடைய உடைகள் கிழித்தெறியப்பட்டன. யாரோ எறிந்த கல் என்னுடைய மண்டையைப் பிளந்தது. எனக்கு நெற்றியிலும் மேல் தலையிலும் இருகாயங்கள் ஏற்பட்டன. பக்கத்திலிருந்த வவுனியாப் பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் அவர்களின் கைக்குட்டையினால் எனது தலையிலுள்ள காயத்தைக் கட்டிக்கொண்டு அந்த இரத்தம் தோய்ந்த உடையோடு நான் இச்சபைக்குள் வந்தேன். நான் இச்சபைக்கு வந்தபொழுது அப்போது இருந்த பிரதமருக்கு அது ஒரு

நகைப்பாக இருந்தது. அவர் சொன்னர், "Honourable wounds of War" என்று. இரத்தம் தோய்ந்த உடையோடு நான் வந்தபோது அப்போதிருந்த பிரதமர் திரு. பண்டாரநாயக்கவுக்கு அது நகைப்பாக இருந்தது. அவர் அப்போது சொன்னர், Wounds of war என்று. யுத்தத்தில் பட்ட வீரத்தழும்போடு நான் வருகின்றேன் என்று அவர் சொன்னர். அன்று முதல் கடந்த இருப்பத்திரண்டு வருடங்களாக இந்தச் சட்டத்தை எதிர்த்து தமிழ் மக்கள் விடாப்பிடியாகக் கிளர்ச்சி செய்து வந்திருக்கிருர்கள். அந்தச் சட்டம் இந்த நாட்டிலே தமிழ் தேசிய இனத்தை இரண்டாம் தரப் பிரசைகளாக்குகின்ற ஒரு முத்திரை அதை எதிர்த்து 1956 ஆம் ஆண்டு முதல் நாம் எத்தனையோ கிளர்ச்சிகளை நடத்தினேம். 1957 ஆம் ஆண்டிலே எங்களோடு ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தார் அன்றைய பிரதமர் திரு. பண்டாரநாயக்க.

அந்த ஒப்பந்த வரலாற்றைத் தாங்களும் அறிந்து இருப்பீர்கள் கௌரவ சபாநாகர் அவர்களே, 'ஏனெனில் அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டியை நோக்கி இன்றைய ஜனதிபதி தலைமையில் சென்ற யாத்திரையில் தாங்களும் கலந்திருந்தீர்கள் என்று அன்ெருரு நாள் ஜனதிபதி அவர்கள் சொல்லி நான் அறிந்தேன். அந்த ஒப்பந்தம் எங்கள் முழு அபிலாசைகளையும் திருப்தி செய்யாது விட்டாலும் ஓரளவு அன்றைய சூழ்நிலையில் ஓர் இடைக்கால ஒழுங்காக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனல் அதை எதிர்த்து உங்களுடைய பாதயாத்திரை மாத்திரம் இடம்பெறவில்லை, புத்தரகித்த தேரோ தலைமையில் ருெஸ்மிட் பிளேசில் அன்றைய பிரதமர் வீட்டிற்கு முன்னல் சத்தியாக்கிரகம் செய்தார்கள் அவருடைய கட்சியினர். இது நடைபெற்றது 1958 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 8 ஆம் தேதி. எனக்கு இந்தத் தேதிகள் எல்லாம் நல்ல ஞாபகத்திலிருக்கின்றன. அன்று நான் இச்சபையிலே இருந்தேன். அங்கே சத்தியாக்கிரகம் முடித்து சத்தியாக்கிரகிகளுக்குத் தோடம் பழச்சாறு கொடுத்து அவர்களை உண்ணவைத்து அன்றைய பிரதமர் திரு. பண்டாரநாயக்க இங்கு வந்து சொன்னர், "அந்த பண்டா—செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்" என்று. இனிமேல் அதைத் தாம் செயற்படுத்த முடியாதென்று அவர் அறிவித்தார்.

நாம் மீண்டும் போராட்டத்தில் இறங்க வேண்டிய கட்டம் வந்தது. மீண்டும் நாம் சட்டமறுப்பில் இறங்கினேம். அந்தச் சட்ட மறுப்பின் பயனக நாம் சிறைக்கு அனுப்பப்பட்டோம். 1958 ஆம் ஆண்டில் இந்த நாட்டில் வகுப்புக் கலவரம் தலைவிரித்தாடியது. இந்த நாட்டில் இன்ெருரு 1958 ஆம் ஆண்டு இனி மேல் வராது என்று தமிழ் மக்கள் நினைக்கக்கூடிய அளவுக்கு தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள். அது ஒரு புதிய கதை அல்ல. இன்றைக்குத் தமிழ் இளைஞர்களிற் சிலர் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிருர்கள் என்றல் அதற்கு அன்றைய

அந்தப் பின்னணியே காரணமாகும். 1958 ஆம் ஆண்டு வகுப்புக் கலவரத்தில் தாக்கப்பட்டவர்கள் எமது மக்கள், கொல்லப்பட்டவர்கள் எமது மக்கள் ஆனால், அன்றைய பிரதமர் திரு. பண்டாரநாயக்க என்ன செய்தார் ? எங்களைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்.

1958 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் தேதி இந்தச் சபையிலே பிரதமர் பேசுவதற்கு முன் எனக்கும் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. கடைசியாகப் பிரதமர் பேசினார் ஒன்பது மணிக்கு மேல். பேசி விட்டு வெளியே சென்ற எங்களைக் கைது செய்தார்கள். எங்களில் சிலரைக் கைது செய்து கொண்டு போய் கோல்பேஸ் ஹோட்டலில் தனி அறையில் வைத்தார்கள். வேறு சிலரை அவரவர் வீட்டில் சிறை வைத்தார்கள். 10 நாட்கள் வைத்திருந்துவிட்டு ஸ்ரன்மோ கிரசன்றிலேயுள்ள ஒரு வீட்டிலே என்னையும் ஏழு பாராளுமன்ற அங்கத்தவர்களையும் அடைத்து வைத்தார்கள். அப்படி அடைத்து வைத்துவிட்டுத்தான் காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்க தமிழ் மொழி உபயோகச் சட்டத்தை இங்கு நிறைவேற்றினார் அப்பொழுது அவர் எங்களுக்கு "நீங்கள் காவலில் இருந்து கொண்டே விவாதத்தில் கலந்து கொள்வதாக இருந்தால் கலந்து கொள்ளலாம்" அன்று சொல்லி அனுப்பினார். "சுதந்திர மனிதர்களாக வருவதாக இருந்தால் வருவோமே தவிர பொலிஸ் காவலிலே வந்து அங்கே பேசி விட்டு மறுபடியும் பொலிஸ் காவலிலே காவல் கைதிகளாகச் செல்வதாக இருந்தால் அதற்கு ஆயத்தமில்லை" என்று நாங்கள் பதில் கொடுத்தோம்.

நாங்களில்லாமல் அந்தச் சட்டம் நிறை வேற்றப்பட்டது. அப்பொழுது இருந்த எதிர்க் கட்சிகள்—ஐக்கிய தேசக் கட்சி உட்பட இது டென்மார்க் இளவரசன் இல்லாமல் ஹம்லெற் நாடகம் நடக்கிறது—Hamlet without the prince Denmark—என்று கூறி தமிழ்ப் பிரதிநிதிகள் இல்லாத இச்சபையிலே இதை நிறைவேற்றுவது பொருத்தமற்றது என்று கூறி வெளி நடப்புச் செய்தனர். ஆளும் கட்சி மாத்திரம் அதை நிறைவேற்றியது.

**1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம்.**

பின்னர் வந்த அரசாங்கங்கள் எல்லாம் காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்க நிறைவேற்றிய இந்த இரண்டு சட்டங்களிலும் யாரும் தொடக்கூடாது; பரிசுத்தமானவை என்று கூறி அவற்றைத் தொடமறுத்தன. அதற்கு உட்பட்டுத்தான் எதையும் செய்ய வேண்டும் எனக் கூறின. நாங்கள் இயன்ற அளவு கிளர்ச்சி செய்தோம். 1961–ஆம் ஆண்டு ஒரு பெரிய சத்தியாக்கிரக இயக்கத்தை நடாத்தினோம். எள்ளளவும் பலாத்காரம் தலைதூக்காத வகையிலே ஒரு மக்கள் இயக்கத்தை நடாத்தினோம். இந்த நாட்டின் வடக்கு, கிழக்கு—

மாகாணங்களிலேயுள்ள ஐந்து கச்சேரிகளுக்கும் முன்னால் நாங்கள் மறியல் செய்தோம். அந்த மறியலிலே இன்று பிரதிக் காணி அமைச்சராக இருக்கின்ற சம்மாந்துறை பிரதிநிதி (ஜனாப் எம். ஏ. மஜீது) கூடக் கலந்து கொண்டார். இரண்டு மாத காலமாக ஐந்து கச்சேரிகளின் முன்னால் நாங்கள் வேறு ஏதுவும் செய்யவில்லை. சபாநாயகரவர்களே கச்சேரி வாயிலிலே குறுக்கே இருந்தோம். பொலிசார் அடித்தாலென்ன, இராணுவம் மிரட்டினாலென்ன நாம் அசையாமலிருந்தோம். எனக்கு அடித்ததினால் நல்ல காயம் ஏற்பட்டது. அப்படி இருக்கும் நாம் அங்கே சத்தியாக்கிரகம் செய்தோம். நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க மிகத் திறமையாக அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 1961 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 17 ஆம் தேதி அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்து எங்களில் 74 பேரை—என்னுடைய மனைவி உட்பட 74 பேரை—பனாகொட இராணுவ முகாமிலே ஆறு மாத காலம் அடைத்து வைத்தார்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, மதிய இடைவேளைக்காகச் சபை ஒத்திவைக்கப்பட்ட நேரத்திலே, 1961 ஆம் ஆண்டில் எமது மொழி உரிமைக்காக அகிம்சை வழியில் நாம் நடத்திய சத்தியாக்கிரகத்தைப் பற்றியும் இரண்டு மாதங்காக வடக்கு, கிழக்கு, மாகாணங்களில் ஐந்து கச்சேரிகளுக்கு முன்னால் நடந்த சத்தியாக்கிரகத்தை முறியடிப்பதற்காக முந்திய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து, 1961 ஆம் ஆண்டு எப்ரில் மாதம் 17 ஆம் தேதி நள்ளிரவில் எங்களில் எழுபத்துநான்கு பேரைக் கைது செய்து பனாகொடை இராணுவ முகாமிற்குக் கொண்டு வந்து ஆறு மாதங்களுக்கு அடைத்து வைத்திருந்ததைப் பற்றியும் நான் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தேன். அதன் பின் தொடர்ந்தும் நாம் எம்மை வருத்தி இந்நாட்டில் எங்கள் மொழி உரிமைக்காக வாதாடினோம்

1965 ஆம் ஆண்டிலே ஒரு மாற்றமான சூழ் நிலை ஏற்பட்டது. தேர்தலில் கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவு செய்யப்பட்ட கட்சிகளில் பெரும் கட்சியாக பாராளுமன்றத்துக்கு வந்தது. ஆனால், அந்தக் கட்சி தம் சொந்த பலத்தைக் கொண்டு அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலையில் இருந்தது. அந்த நேரத்திலே எமது கட்சித் தலைவர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களான டட்லி சேனநாயக்க அவர்களுக்கும் இன்றைய மாண்பு மிகு ஜனாதிபதியான ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களுக்குமிடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அதன் பலனாக 1965 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் தேதி இரண்டு கட்சித் தலைவர்களுக்கு மிடையிலே ஓர் ஒப்பந்தம் கையெழுத்

தானது. அதாவது 1965 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் தேதி கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களுக்கும் எங்கள் தலைவர் திரு வாளர் செல்வநாயகம் அவர்களுக்குமிடையிலே ஓர் ஒப்பந்தம் கை யெழுத்தானது.

## தமிழ் மொழி (சிறப்புச்) சட்டவிதி பயனற்றதாகியது

உண்மையிலே அந்த ஒப்பந்தத்தை எழுத்திலே போட்டு இரு தலை வர்களும் கையெழுத்திட வேண்டுமென்று கூறியவர் இன்றைய ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள் டொக்டர் எம். வீ, பீ. பீரிஸ் அவர்களுடைய வீட்டிலே நாம் சந்தித்து இந்தப் பேச்சு வார்த்தைகளை நடத்தினோம். அந்த ஒப்பந்தத்திலே தமிழ்மொழி உரிமையைப் பற்றிச் சட்ட விதிகளைக் கொண்டு வருவதற்கும் தமிழிலே இலங்கை முழுவதிலும் கருமம் ஆற்றுகின்ற உரிமைக்கு வழிவகுப்ப தற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து பிரதமர் திரு. டட்லி சேனநாயக்க அவர்களின் தலைமையிலான தேசிய அரசாங் கத்திலே நாமும் சேர்ந்தோம். அந்த அரசாங்கம் 1966 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் தேதி தமிழ்மொழி உபயோகம் பற்றிய சட்டவிதிகளை இச் சபையிலே கொண்டுவந்தது. அதை இந்தச் சபையிலே சமர்ப் பித்துப் பேசியவர் இன்று ஜனாதிபதியாக இருக்கின்ற திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள்தான்.

ஆனால் அப்பொழுது எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள் அதை எதிர்த்து ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள். அப்பொழுது கொள் ளுப்பிட்டியிலே பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டி யேற்பட்டது. அதனால் ரதனசார தேரோ என்ற ஒரு பௌத்த பிக்கு உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது அந்த நெருக்கடிக்கு மத்தியிலும் அந்த அரசாங்கம் அச்சட்ட விதிகளை நிறைவேற்றியது அன்று. ஆனால், 1966 ஆம் ஆண்டு எவ்வளவு நெருக்கடியின் மத்தி யிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டவிதிகள், இன்றை வரை அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை என்பதை நான் இங்கே மிகவும் துக்கத்துடனும் வேதனையுடனும் கூறிவைக்க விரும்புகிறேன். 12 வரு டங்களாக அவை செயலற்றிருந்தன, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மாறி, மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அத்தனகலலை அங்கத்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலே 1970-ம் ஆண்டு ஆட்சி பீடமேறியது அந்தச் சட்டவிதிகள் செல்லுபடி யற்றவை என்று கூறிவிட்டார்கள். அப்பொழுது திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க சொன்னார்.

"I think you have no right to vindicate because I think these Regulations are *ultru veres* the main Act,"

25.6.71 ஆம் தேதிய ஹன்சாட்டிலே தொகுதி 1, பந்தி 2107இல் அவர் அவ்வாறு கூறியிருக்கின்றார். கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா ஹன்சார்ட் தொகுதி 2, பந்தி 334 இலே (8.5.1975) தெளிவாகக் கூறினார்.

"That is the view of this Government—as was the view we held and continue to hold—that these Regulations are *ultra vires* the Tamil Language (Special Provisions) Act and that therefore this Government was not applying these Regulations is the Administration."

என்று மிகவும் கஷ்டத்தின் மத்தியிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டவிதிகள் 12 வருடங்கள் செயற்படுத்தப்படவில்லை. இவ்வளவு காலத்துக்குப் பின்னர் இப்பொழுது இந்த அரசியல் அமைப்பிலே தமிழ்மொழி உரிமை பற்றிச் சில விதிகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

கௌரவ சபாநாயகரவர்களே, இவ்விதிகளை ஏட்டிலே போட்டுவிட்டால் மட்டும் போதும் என்று யாரும் நினைத்துவிட முடியாது. எமது அனுபவம் அதற்கு மாறாக இருக்கிறது. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்று தமிழிலே ஒரு பழமொழி இருக்கிறது. வெறுமனே சட்டங்களை ஆக்குவதனால் மாத்திரம் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்த முடியாது. சட்டங்கள் சரியான முறையில் அமுல் நடத்தப்படவேண்டும். நான் ஒன்றை இச்சந்தர்ப்பத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழ்மொழி உபயோகம் பற்றிய அரசியல் அமைப்பு விதிகள் அமுல் நடத்தப்படுவதற்கு ஏற்ற துணைவிதிகள் எதுவும் இந்த அரசியல் அமைப்பில் இல்லை. உதாரணமாக உத்தியோக மொழி, நிர்வாக மொழி பற்றிய சட்டத்தை நடத்த வேண்டியவர்கள் உத்தியோகத்தர்கள். தமிழில் கருமமாற்றும் உரிமை உண்டு என்று சட்டத்தில் எழுதி வைத்துவிட்டால் போதாது. காரியாலயத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டும். காரியாலய ஊழியருக்குத் தமிழ் மொழி தெரிந்தால்தான் அதை அவர்களால் நிறைவேற்ற முடியும். ஆனால், அரசியல் அமைப்பிலே எந்த உத்தியோகத்தரையும் தமிழ் மொழியைக் கற்குமாறு கேட்பதற்கு எந்தவிதமான விதியும் இல்லை. அதற்கு மாறாக தமிழ்மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் உத்தியோக மொழியாகிய சிங்களத்தைக் கற்க வற்புறுத்தி அரசியல் அமைப்பிலே விதி இடம் பெற்றிருக்கிறது. தமிழ் மொழி பற்றிய சட்டவிதிகளை அமுலாக்க எந்த உத்தியோகத்தரும் தமிழ் தெரிந்திருக்க வேண்டுமென்று கேட்க விதி இல்லாத இடத்து யார் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தப் போகிறார்கள்? உண்மை

யில் நடைமுறையில் இது உயிர் அற்ற ஒரு சட்டமாக இருக்கும் ஆபத்து உண்டென்பதைக் கடந்தகால அனுபவத்தைக் கொண்டு எமது மக்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இதை நாம் மிகவும் பொறுப்பு உணர்ச்சியோடு, இந்த நாட்டில் நாம் அடைந்த வேதனை தரும் அனுபவத்தைக் கொண்டு கூறுகிறோம். ஒரு தமிழ்மகன் அனுராதபுரத்திலோ தென்னிலங்கையிலோ உள்ள ஒரு கச்சேரியில், "எனக்குத் தமிழில் கருமமாற்ற உரிமையுண்டு; எனக்குத் தமிழ்ப் படிவம் தா; தமிழில் நிரப்பித் தரப்போகிறேன்" என்று கூறுகிறான் என்று வைத்துக்கொள்வோம். இன்றைக்கு நாடு இருக்கும் சூழ்நிலையில் அத்தகைய ஒருவர் உயிருடன் விடு போவாரா என்று சொல்ல முடியாது இது வெறும் கற்பனை அல்ல. அதனால்தான் நான் கூறுகிறேன் ஏட்டிலே ஒரு சில உரிமைகளை எழுதி வைத்தால் மட்டும் போதாது என்று. இவ்வளவு காலமும் தனிச் சிங்களக் கொள்கையை எதிர்த்துப் போராடியதன் விளைவாக இந்த அரசியல் அமைப்பிலே ஓரளவு பலன் அளிக்கப்பட்டிருந்தாலும் இதனால் மாத்திரம் எமது மொழி உரிமை ஊர்ஜிதப்பட்டதாக இல்லை. அதுமாத்திரமல்ல; இந்த அரசியல் அமைப்பை நீதி சமத்துவம் என்ற தத்துவ அடிப்படையில் ஆக்கி இருப்பதாகக் கௌரவ பிரதமர் கூறினார். நான் கேட்கிறேன், சமத்துவம் எங்கே இருக்கிறது? இந்த அரசியலமைப்பிலே 18ஆவது விதி கூறுகிறது.

"The official Language of Sri Lanka shall be Sinhala."
9 ஆவது விதி கூறுகிறது,

"The republic of Sri Lanka shall give to Buddhism the foremost place and accordingly it shall be the duty of the State to protect and foster the Buddha Sasana, white assuring to all religions the rights granted by Articles 10 and 14 (e)."

விதிகள் 10இன் கீழும் 14(ஏ)யின் கீழும் மற்றைய மதத்தவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமை, தத்தம் மதங்களை அனுஷ்டிக்கின்ற உரிமை. ஆனால் பௌத்த மதத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமை அரசாங்கத்தால் பேணி வளர்க்கப்படுகின்ற உரிமை மற்றைய மதங்களுக்கு இல்லை கிறிஸ்தவ மதத்துக்கு அந்த உரிமை இல்லை. சைவ மதத்துக்கு இல்லை. இஸ்லாமிய மதத்துக்கு இல்லை. எங்கே இருக்கிறது சமத்துவம்?

சிங்கள மொழி மாத்திரம் அரசாங்க மொழி. தமிழ்மொழி ஒரு தேசிய மொழி. சில உரிமைகளுக்கு மாத்திரம் உபயோகிக்கப்படுகிற மொழி. சமத்துவம் என்று கூறும்பொழுது எண்ணிக்கையில் சமத்து

வத்தை நான் குறிப்பிடவில்லை. ஆனால் நிலையிலே குணத்திலே, பண்பிலே சமத்துவத்தைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அந்தச் சமத்துவம் எங்கே இருக்கிறது?

நேற்றைய தினம் கௌரவ பிரதமர் அவர்கள் பேசும் போழுது ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புக்கு அதிலே கூறப்பட்டிருக்கின்ற தேசியக் கொடிக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வரும் எண்ணத்தைக் கூறினர்கள். அந்தக் கொடியின் நாலு மூலைகளிலும் அரசிலை இடம்பெற வேண்டுமென்ற வற்புறுத்தலினல் அதற்கு அரசாங்கம் செவிசாய்த்து அந்தக் கொடியை அந்த வகையிலே மாற்ற இருப்பதாக அவர் எடுத்துக் கூறினர். அரசிலை அங்கே இடம்பெற வேண்டுமென்ற கோரிக்கைக்கு அடிப்படைக் காரணம் என்ன? பௌத்த மதத்தோடு தொடர்புடைய, பௌத்த மதத்தின் ஒரு சின்னமாகிய அரசிலை அந்தக் கொடியிலே இடம் பெற வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை தான் இங்கே இடம் பெற்றிருக்கின்றது. அப்படியானல் எங்கே சமத்துவம்? பெரும்பான்மை மதத்தினர், பெரும்பான்மை மொழிப் பேசுவோர் எதைக்கேட்டாலும் அதற்கு விட்டுக் கொடுக்கவேண்டும் என்ற நிலை இருந்தால் சமத்துவம் எங்கே இருக்கிறது என்றுதான் நான் கேட்கிறேன்.

கௌரவ பிரதமர் அவர்கள் சமத்துவம் நீதி ஆகியவற்றின் அடிப்படையிலேதான் தாம் இயங்குவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனல், சமத்துவம் இடம் பெறவில்லை என்பதைக் காட்டத்தான் நான் இவற்றைக் குறிப்பிடநேரிட்டது. இந்த நாட்டிலுள்ள பல்வேறு மதங்களுக்கிடையில் சமத்துவம் இல்லை; இந்த நாட்டிலுள்ள பல்வேறு மொழிவாரி இனங்களுக்கிடையில் சமத்துவம் இல்லை என்பதைக் காட்டதான் நான் இவற்றை எடுத்துக்கூறினேன்.

கௌரவ சபாநாயகரவர்களே, ஆளும் கட்சி தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகள் சிலவற்றை இனங்கண்டு குறிப்பிட்டிருந்தது. அவற்றிலே ஒன்று, முக்கியமாகக் குடியேற்றம் பற்றியது. பாரம்பரியமாக ஒரு மொழியைப் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்ற பிரதேசத்திலே வேற்று மொழி மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றி அங்கே வாழ்கிற மக்களைச் சிறுபான்மையோராக்கி அவர்களுக்கு அரசியலுரிமை, வேறு பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைதான் 1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடக்கம் நாங்கள் முன்வைத்தோம். இதையொட்டிக் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க அவர்களோடு எங்கள் தலைவர் செய்த ஒப்பந்தத்தில் சில தெளிவான முடிவுகளுக்கு வந்தோம். 1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் தேதி கையெழுத்தான அந்த ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்னவென்றல்,

"It was agreed that in the matter of oolonizatiou schemes the powers of the .regional councils shall include the power to sel ect alloeetts to whom lands withm the area of authority shall be alienated and also power to select personnel to be employed for working such schemes. The position regarding the area at present adminstered by the Gal Oya Development Board in this matter requires consideration."

இதுதான் அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டது. அதன் பின் அதையொட்டி ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியின் காரணமாக அதிலே சில மாற்றங்கள் செய்த நேரத்தில் காலஞ்சென்ற பண்டாரநாயக்க அவர்கள் 16–8–57 இல் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதிலே அவர் எந்த நீதியான அரசாங்கமும் இந்த விஷயத்தில் கைக்கொள்ள வேண்டிய ஓர் அடிப்படைக் கொள்கையைத் தெளிவுறுத்தினர்.

"The insrument of colonization should not be used to convert the Northern and Eastern Provinces into Sinhalese majority areas or in any other manner to the detriment of the Tamil-speaking people of these areas."

இது 16–8–57 இல் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க அவர்கள் ஏற்றுக்கொண்ட ஒரு கொள்கை. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களான கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களும் கௌரவ ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களும் 1965 ஆம் ஆண்டு திருவாளர் செல்வநாயகம் அவர்களோடு எழுதிய ஒப்பந்தத்தில் இதை ஏற்றுக் கொண்டனர். இதை இங்கு பின் வரிசை உறுப்பினர்கள் அறிவதற்காக வாசித்துக்காட்ட விரும்புகிறேன்.

"Mr. Senanayake further agreed....."

(திரு. என். டென்சில் பெர்ணாண்டோ

Is that the original ?

(திரு. ஏ. அமிர்தலிங்கம்)
(Mr. A. Amirthalingam)

Not the original - [*Interruption.*] You ask the president: he will tell you.

(திரு. என். டென்சில் பெர்ணாண்டோ)

The President is not a Member of this House. So. somebode must take the responsibllity.

(திரு. ஏ. அமிர்தலிங்கம்)

I was there myself.

(திரு. என். டென்சில் பெர்ணாண்டோ)

Maybe. But somebody must take the responsibllity for its authenticity. It is an agreement between two leaders.

(திரு. அமிர்தலிங்கம்)

I take full responsibility for it I am sure His Excellency the President himself who got this typed and got it signed will agree that this is a true version.

(திரு. என். டென்சில் பெர்ணாண்டோ)

His excellency is not a Member cf of this House.

(திரு. காமினி திஸாநாயக்க - நீர்பாசன மின்சார,
பெருவீதிகள் அமைச்சர்)

Jt is a very important point he has raised !

டட்லி – செல்வா ஒப்பந்தம்

(திரு. ஏ. அமிர்தலிங்கம்)

24-3-65 இல் கௌரவ டட்லி சேனநாயக்க அவர்கள் திருவாளர் செல்வநாயகம் அவர்களும் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டவற்றை நான் வாசிக்கிறேன்.

"Mr. Senanayake further agreed that in the granting of land under colonization schemes the following conditions be observed in the Northern and Eastern Provinces."

(a) land in the Northern and Eastern Province should in the first instanee be granted to tandless persons in the district:

(b) secondly. to Tamil-speaking persons resident in the Northern and Eastern provinces. and

(c) thirdly, to other citizens of ceylon, preference being given to Tamil citizens in the rest of the island."

இதுதான் கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களும் திருவாளர் செல்வநாயகம் அவர்களும் குடியேற்றத்தைப் பற்றி 1965 ஆம் ஆண்டு ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட உடன்படிக்கை. ஆனபடியால் இந்த நாட்டிலேயுள்ள இருபெரும் கட்சிகளின் தலைவர்களும் ஏற்றுக்கொண்ட அடிப்படையை மறந்து விடயங்கள் நடைப்பெற்று வருவதாலேதான் இந்த நாட்டிலே தமிழ்பேசும் மக்கள் இன்று மிகவும் வேதனையடைந்த நிலையில் இருக்கிறார்கள், இந்த நாட்டின் எந்தப்

பகுதியிலும், எந்த இடத்திலும் தாம் பயமின்றி. எந்தவிதமான தாக்குதலிலிருந்தும் தப்பித் தஞ்சம் புகுந்து வாழ ஒரு பகுதி தமக்கு இல்லாமல் போயவிடுமோ என்ற ஏக்கம் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனாலேதான் அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்தக் குடியேற்றம் பற்றித் தமிழ்பேசும் மக்கள் மனதிலே இருக்கின்ற அச்சம் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கின்றது. ஆனால் அந்த அச்சத்தைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையோ அந்த அச்சத்தைத் தீர்ப்பதற்கான திட்டங்களையோ இந்த அரசியலமைப்பிலே காண முடியாமலிருக்கிறது. அதற்கு அடிப்படையாக இருக்க வேண்டிய எந்த அம்சமும் இங்கே இடம்பெறாதது மிகவும் வேதனையைத் தருகின்றதென்பதை இங்கே கூறிவைக்க விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகரவர்களே, இந்த அரசியலமைப்பிலேயுள்ள வேறு பல விடயங்களை எடுத்துக் கூறவேண்டியிருந்தாலும் அடிப்படை உரிமைகள் பற்றிய விடயங்களையும் ஏனைய விடயங்களையும் ஆங்கிலத்திலே பேசுகின்றபொழுது எடுத்துக்கூற விரும்புகிறேன். எனது தமிழ்ப் பேச்சை முடிக்கமுன்னர் நான் கூற விரும்புவது ஒன்றே ஒன்றுதான். தமக்கு கிடைத்த மக்கள் கட்டளையின் பிரகாரம் இந்த யாப்பை யாத்துள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. எம்மைப் பொறுத்தவரையிலே எமக்குக் கிடைத்த எமது மக்களின் கட்டளையின் அடிப்படையிலே இந்த அரசியல் யாப்பை ஏற்றுக்கொள்ளவோ இந்த அரசியல் யாப்பை நிறைவேற்ற உடந்தையாக இருக்கவோ எமக்கு உரிமையில்லை. இந்த யாப்பு எமது மக்களைக் கட்டுபடுத்தக் கூடியதல்ல. நான் ஆரம்பத்திலே கூறியது போல இன்றைக்கு நடைமுறையிலே இருக்கின்ற அரசியல் யாப்பு எப்படி எமது மக்களுடைய சம்மதத்தோடு கொண்டுவரப்படாத காரணத்தால் எம்மைக் கட்டுப்படுத்தாது என்று நாம் நீதிமன்றத்திலே வாதாடினோமோ அதேபோல இந்த அரசியல் யாப்பைப் பொறுத்தவரையிலும் எமது நிலையை நான் தெளிவாக எடுத்துக்கூற கடமைபபட்டவனாக இருக்கின்றேன்.

இந்த யாப்பிலே சில சில விடயங்கள்—உதாரணமாக குடியுரிமை விடயத்திலே பதிவுப் பிரசைக்கும் வம்சாவளிப் பிரசைக்குமுள்ள வித்தியாசம் போன்றவை நீக்கப்பட்டதை குறைத்துக் கூறவில்லை. ஆனால், எமது அடிப்படை நிலை மாற்றப்படவில்லை. இந்த நாட்டிலே இரு தேசிய இனத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். பரம்பரையாக வாழ்ந்து வருகின்றனர். அந்நிய ஆதிகத்தின் கீழ் நாம் அடிமைப்பட்டு இருந்த நேரத்திலே தனித் தனியாக அடிமைப்பட்டோம். இந்த நாட்டிலே தமிழ் மக்களுடைய அரசை 1919 ஆம் ஆண்டிலே தனியாகத்தான் போர்த்துக்கீசர் வெற்றி கொண்டார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம், அவர்களினால் இங்கே தாக்கப்பட்டுக் கொண்டிருந்த கண்டி மன்னனுக்கு உதவியாக இந்தியாவிலேயிருந்த படைகள் வருவதற்கு யாழ்ப்பாண அரசன் உதவி செய்கிறான் என்பது. அவ்வாறு

அவனை வெற்றி கொண்டார்கள். போர்த்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் யுத்த முனையிலே எமது ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் 1796 ஆம் ஆண்டு யுத்தத்தினால் எமது பிரதேசத்தின் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஆங்கிலேயர்தான் முதல் முதலாக 1833 ஆம் ஆண்டிலே இந்நாட்டிலே தமிழ்பேசும் மக்களுடைய பிரதேசங்களை—வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை ஒரே நிர்வகாத்தின் கீழ் கொண்டுவந்தார்கள். ஆங்கிலேயர் எம்மை ஒரே நிர்வாகத்தின் கீழ் அடிமைத் தளையின்கீழ் கொண்டுவந்ததால் எமது தனி உரிமை அழிந்து ஒழிந்து போய்விடவில்லை. நாட்டிற்கு கிடைத்த சுதந்திரம் எமக்கு கிடைத்திருக்க வேண்டும். அதற்கு பதிலாக ஜன நாயகத்தின் பேரால் பெரும்பான்மை என்ற போர்வையில் ஒரு பகுதி மக்களின் கையிலே அரசியல் அதிகாரம் சென்றடைய அவர்கள் தயவில் தங்கி இருப்பவர்களாக எவ்வித உரிமையுமற்றவர்களாக தமிழ் தேசிய இனம் ஆக்கப்பட்டிருக்கிறது. தமிழ் தேசிய இனம் புதிதாக எதையும் கேட்கவில்லை. தமக்கு உரித்தான ஆட்சி உரிமையைத்தான் நாம் கேட்டு நிற்கின்றோம். அதற்கு உத்தரவாதம் இந்த அரசியல் அமைப்பிலே இல்லை. அதனால்தான் இந்த அரசியல் அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம்.

அது மாத்திரமல்ல எமது மக்கள் ஒரு தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது சுயநிர்ணய உரிமையை உபயோகித்து தம்மைதாம் ஆளவும் ஒரு சுதந்திரத் தமிழ் ஈழத்தை நிறுவவும் ஒரு வேண்டுமென்று எமக்குக் கட்டளை இட்டிருக்கிறார்கள். அந்தக் கட்டளைப்படி பணிப்புரிவது எமது கடமை. இந்த நிலையை நான் மிகத் தெளிவாக இங்கு எடுத்துக் கூறுகிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இனிக் கூறவேண்டிய என் கருத்துக்களை ஆங்கிலத்தில் கூற விரும்புகிறேன்.

[ இத்துடன் தமிழில் ஆற்றிய பேருரை முடிவுற்றது. தொடர்ந்து ஆங்கிலத்தில் ஆற்றிய உரை 2வது பாகமாக வெளிவந்துள்ளது. ]

INSTITUTE OF HUMANISTIC STUDIES



# அரசியலில் அமிர்

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் 1927-ஆம் ஆவணி 26-ம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகம் என்னும் திருநகரில் பிறந்தார். ஆரம்ப கல்வியை பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையிலும். உயர்கல்வியை சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் கற்றார். 1945-ம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக் கழகம் புகுந்து 1948-ல் கலைப்பட்டதாரியாக (B, A.) வெளிவந்தார். பல்கலைக் கழகத்தில் இருந்தபோது பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் தலைவராக 1947-ல் தெரிவு செய்யப்பட்டார்.

1949-ல் சட்டக்கல்லூரியில் நுழைந்து 1951-ல் வழக்குரைஞரானார். 1950ல் சட்டக் கல்லூரியின் தமிழ் மன்றத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். முதல் தலைவரும் அவரே. பல்கலைக் கழகத்தில் படித்த போது தமிழ் அரசியலில் கொண்ட ஆர்வத்தினால் தந்தை செல்வா போன்றவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அதனால் தமிழ்த் தலைவர்கள் ஒருங்கிணைந்து 1949-ல் உருவாக்கிய அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப தளகர்த்தர்களில் ஒருவராக விளங்கினார். 1950-ம் ஆண்டில் தமிழரசு வாலிப முன்னணியை உருவாக்கி அதன் தலைவராக விளங்கினார். 1953-ம் ஆண்டில் நடைபெற்ற ஹர்த்தாலில் மிகப்பெரும் பங்கெடுத்து வடகிழக்கு மாகாணத்தில் ஹர்த்தாலை வெற்றியடையச் செய்தார். ஐ.தே.கட்சியின் அன்றைய பிரதமராயிருந்த சேர். ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாண நன்நகருக்கு 1954-ல் வருகைத் தந்தபோது கறுப்புக் கொடி காட்டி குண்டாந் தடியால் தாக்கப்பட்டு செந்நீர் சிந்தினார்.

1952-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இழங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக வட்டுக்கோட்டையில் போட்டியிட்டு செல்வமும், செல்வாக்கும், அனுபவமும் மிக்கப் பெரியார் வீரசிங்கத்திடம் மிகக் குறைந்த வாக்குகளால் தோல்வியடைந்தார். தளராத இதயத்தோடும் தொடர்ந்து தேர்தல்களில் போட்டியிட்டார். 1956, 1960, 1965 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் பெரும்பான்மை வாக்குகளால் வட்டுக்கோட்டைத் தொகுதியில் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றார்.

1956-ம் ஆண்டு ஆனி 5-ம் திகதி ''சிங்களம் மட்டும்'' சட்டத்தை எதிர்த்து காலி முகத்தில் நடத்திய சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றி காடையர்களால் தாக்கப்பட்டு காயமுற்றார். 1956 ஆவணி 19-ம் திகதி தொடங்கிய திருமலை பாதயாத்திரையில் பெரும்பங்கெடுத்துக் கொண்டார். சிங்களச் சிறீ எழுத்தை எதிர்த்துப் போராடி 14 நாட்கள் சிறை சென்றார்.

1958-ம் ஆண்டு தமிழ் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டபோது திரு. அமிர்தலிங்கமும் அவரது பாரியாரும் பனாகொடையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

1961-ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் 6 மாத காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். 1964-ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1973-ம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 14.5.72ல் உருவாக்கப்பட்ட தமிழர் கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

14.5.76 ல் நடைபெற்ற வட்டுக்கோட்டை மாநாட்டு தீர்மானத்தை சட்டத்திற்கு விரோதமாக விநியோகித்ததற்கு 10 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

1977-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டு மிக அதிகபடியான வாக்குகளால் வெற்றிப்பெற்று நாடாளுமன்றம் சென்ற திரு. அமிர்தலிங்கம் இலங்கை தேசிய அரச பேரவையில் எதிர்க்கட்சி தலைவராக விளங்கும் பெரும் வாய்ப்பைப் பெற்றார். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் புதிய அரசியல் அமைப்பை எதிர்த்து சுமார் 5 மணித்தியாலங்கள் ஆற்றிய பேருரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

இரா. சம்பந்தன்

விலை ரூ. 3/-

வெளியீடு :

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம்

344, காலி வீதி, கொழும்பு - 6.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம்

எதிர்க்கட்சி முதல்வர்

திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ

இலங்கைத் தேசிய அரசுப் பேரவையில்

3-8-78 இல்

நிகழ்த்திய உரை.

## அமிரின் ஆற்றலுக்கு சபாநாயகர் பாராட்டு!

"சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இச்சந்தர்ப்பத்தில் தங்களது இந்த நீண்ட உரை நிறைந்தகருத்துச் செறிவுடனும், சொல்லாட்சியுடனும், தர்க்கரீதியாகவும் அமைந்திருந்தது. தாங்கள் இந்த உரையை நிகழ்த்தியபோது சபைக்கு தலைமை தாங்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்"

இவ்வாறு புதிய அரசியலமைப்பு விவாதத்தில் கலந்து கொள்ளாததற்கு விளக்கமளிக்கும் வகையில் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ: அமிர்தலிங்கம் நிகழ்த்திய 4 1/2 மணி நேர உரையினால் ஈர்க்கப்பட்ட சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ், திரு. அமிர்தலிங்கத்தை மனம் திறந்து ...உத மூலம் பாராட்டியுள்ளார்.

நியூ லீலா அச்சகம், கொழும்பு 12.